**கவனிக்க.-** இந்த வர்த்தமானியின் பகுதி VI இல் 2016 ஆம் ஆண்டுக்கான பாணந்துறை நீதாசன வலயத்துக்குரிய யூரிமார் பெயர்பட்டியல் ஒன்று சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் பிரசுரிக்கப்படுகின்றது.


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1977 - 2016 ජුලි මස 22 වැනි සිකුරාදා - 2016.07.22

*1977 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு யூலை மாதம் 22 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 1194 |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 1217 |


**கவனிக்க.-** டாக்டர் சமன் வீரசிங்க மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2016, மே மாதம் 20 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2016, ஓகத்து 12 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2016, யூலை மாதம் 29 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

***2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு***

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**பி. கே. எஸ். ரவீந்திர,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2016 ஆம் ஆண்டு யூன் மாதம் 21 ஆந் திகதி.*

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானிகளில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

*1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.*

*1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).*

*1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகாண் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.*

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

*2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.*

*2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.*

*அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.*

*2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.*

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

*3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-*

*3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகாண் நிலையிலேயே இருக்கும். தகுதிகாண் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.*

*3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.*

*3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.*

*3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகாண் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.*

*3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.*

*3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.*

*3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகாண் நிலையில் இருக்க வேண்டியதில்லை.*

*3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.*

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

*4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.*

*4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.*

*4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிக் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.*

*4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.*

**5. யுத்த சேவைச் சலுகை :**

*5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.*

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

*6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.*

*6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.*

*6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.*

*6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.*

*6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.*

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

*7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.*

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

*இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.*

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப்படுவர் ;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சாதிகாரி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை ஆணைக்குழுவால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.

14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

முஸ்லிம் விவாக பதிவாளர் பதவி - குருநாகல் மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள முஸ்லிம் விவாக பதிவாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர்கள் உரிய முஸ்லிம் விவாகப் பதிவுப் பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளர்களாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

2. இப்பதவிக்காக முஸ்லிம் ஆண்கள் மட்டுமே விண்ணப்பிக்க முடியும்.

3. விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்குக் குறையாமல் இருப்பதோடு 60 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

5. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமாக மேலதிக விபரம் உரிய மாவட்டச் செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

6. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

7. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2016, ஓகத்து மாதம் 22 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2016, யூலை 04.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| குருநாகல் | பிங்கிரிய | குருநாகல் மாவட்டத்தின் கட்டுகம்பல ஹத்பற்று பிரிவின் கரதாபற்று பிரதேசத்தின் முஸ்லிம் விவாக பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், குருநாகல் |

7-828

## சட்டமா அதிபர் திணைக்களத்தின் கனிஷ்ட உதவி அரச சட்டவாதி பதவிக்கான (சட்ட உத்தியோகத்தர் வகை) ஆட்சேர்ப்பு

சட்டமா அதிபர் திணைக்களத்தின் கனிஷ்ட உதவி அரச சட்டவாதி பதவியின் பன்னிரண்டு 12 வெற்றிடங்களை நிரப்புவதற்கு கீழே குறிப்பிட்டுள்ள தகுதிகளையுடைய இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. **ஆட்சேர்ப்பு முறை.**- வர்த்தமானப் பத்திரிகையில் குறிப்பிட்டுள்ள தகுதிகளை பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகள், அரச சேவைகள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட சட்டமா அதிபர் திணைக்களத்தின் சிரேஷ்ட உத்தியோகத்தர்களைக் கொண்ட நேர்காணல் குழுவினால் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையில் நேர்முகம் காணப்பட்டு, 50 புள்ளிகள் அல்லது அதற்கு அதிகமான புள்ளிகளைப் பெற்றவர்களில் வெற்றிடங்களில் இருமடங்கானோர் இறுதிக் கட்டமைக்கப்பட்ட நேர்முகம் காணலுக்கு அழைக்கப்படுவர்.

இறுதி கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்றுக்கொள்ளும் விண்ணப்பதாரிகள் காணப்படும் வெற்றிடங்களின் எண்ணிக்கை மற்றும் சேவை தேவைப்பாடுகளுக்கு அமைவாக ஆட்சேர்ப்புச் செய்யப்படுவர். (கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை அரச சேவைகள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட இல. 5 இன்கீழ் காட்டப்படும் புள்ளி வழங்குதலுக்கு அமைவாக நடத்தப்படும்.)

2. **தேவையான தகைமைகள் :**

(i) *கல்வி/ தொழில்சார் தகைமைகள்.*- இலங்கை உயர் நீதிமன்றத்தில் சட்டத்தரணியாக சத்தியப்பிரமாணம் செய்திருத்தல் மற்றும் நொத்தாரிசு கட்டளைச் சட்டத்தின்கீழ் நொத்தாரிசு அனுமதிப்பத்திரம் பெறப்பட்டிருக்க வேண்டும்.

(ii) *தேக ஆரோக்கியத் தகைமைகள்.*- ஒவ்வொரு விண்ணப்பதாரியும் இலங்கையின் எந்த பிரதேசத்திலும் பதவிக்கான கடமைகளை மேற்கொள்ளத்தக்க தேக மற்றும் மன ஆரோக்கியத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(iii) *ஏனையவை :*

* இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.
* சிறந்த நன்னடத்தை உடையவராக இருத்தல் வேண்டும்.
* இலங்கை சட்டங்களின் கீழ் குற்றவாளியாக குற்றம் சாட்டப்படாதவராக இருத்தல் வேண்டும்.
* விண்ணப்பப்படிவங்கள் கோரப்படும் இறுதித் திகதிக்கு, இப்பதவிக்கான எல்லா ஆட்சேர்ப்புத் தகைமைகளை எல்லா வகையிலும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

(iv) *வயதெல்லை.*- விண்ணப்ப முடிவுத் திகதியன்று விண்ணப்பதாரி 22 வயதுக்கு குறையாமலும் 40 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

3. **பணிக்கமர்த்தும் நிபந்தனைகளும் சேவை நிபந்தனைகளும் :**

(i) இப்பதவி நிரந்தரமானதும், உமக்கு உரித்தான ஓய்வுதியத் திட்டம் தொடர்பாக எதிர்காலத்தில் அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படும் கொள்கைத் தீர்மானங்களுக்கு நீர் கீழ்ப்படிய வேண்டும்.

(ii) நியமனங்கள் 3 வருட தகுதிகாண் காலத்துக்கு ஏற்புடையதாகும்.

(iii) பொது நிர்வாக சுற்றறிக்கை இல. 01/ 2014 இன் பிரகாரம் குறிப்பிட்ட காலப்பகுதியினுள் சேவையில் சேர்த்துக்கொள்ளப்பட்ட மொழிக்கு மேலதிகமாக மற்றைய அரச கரும மொழி தொடர்பாக தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும். அரச கரும மொழி அல்லாத மொழி மூலமாக சேவையில் இணைத்துக் கொள்ளப்பட்ட அலுவலகர்களினால் தகுதிகாண் காலத்தினுள் உரிய அரச கரும மொழி தொடர்பான தேர்ச்சியினை பெற்றிருத்தல் வேண்டும்.

(iv) நியமனங்கள் அரச சேவை ஆணைக்குழு ஊழியர் ஒழுங்கு விதிகளுக்கும், இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனக் கோவைக்கும், அரசாங்க நிதி ஒழுங்கு விதிகளுக்கும், திணைக்கள கட்டளைச் சட்டத்துக்கும் கட்டுப்பட்டதாகும்.

4. **சம்பள அளவுத்திட்டம்**.- 2016.02.25 ஆந் திகதிய 03/2016 ஆம் இலக்கமுடைய பொது நிர்வாக சுற்றறிக்கையின் I ஆம் அட்டவணையின்படி இப்பதவிக்குரிய மாதாந்த சம்பள அளவு ரூபா 58,295 - 5 x 1,335 - 5 x 1,630 - 15 x 2,170 - ரூபா 1,05,670 (SL - 05 -2016) ஆகும். அச்சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு அமைவாக அவ் II ஆம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு உங்களுக்கான சம்பளம் வழங்கப்படும்.

(**உதாரணம்**.- 2016.01.01 ஆந் திகதிக்கும் 2016.12.31 ஆந் திகதி வரை உரித்துடையது. 34,135 ரூபா அடிப்படை சம்பளமும் 9,579 ரூபா சீர்படுத்துகைக் கொடுப்பனவையும் உள்ளடக்கும்.)

5. கீழ்க்காட்டப்பட்ட புள்ளி வழங்கும் முறைக்கு அமைவாக கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை நடாத்தப்படும் :

| விடயம் | அதிகூடிய புள்ளிகள் | விபரணம் | புள்ளிகள் |
|---|---|---|---|
| கல்வித் தகைமைகள் | 20 புள்ளிகள் | (i) அரசு அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் அல்லது இலங்கைச் சட்டக் கல்லூரியினால் வழங்கப்பட்ட உரிய துறைசார் சட்ட பட்டப் பின் படிப்பு டிப்ளோமா. | 08 புள்ளிகள் |
| | | (ii) அரசு அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றினால் வழங்கப்பட்ட சட்டமாணிப் பட்டம் (LLB) (1 ஆம் தரச்சித்தி) | 07 புள்ளிகள் |
| | | (iii) அரசு அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றினால் வழங்கப்பட்ட சட்டமாணிப் பட்டம் (LLB) (2 ஆம் தர மேல் நிலைச் சித்தி) | 06 புள்ளிகள் |
| | | (iv) அரசு அங்கீகரிக்கப்பட்ட பல்கல்லக்கழகம் ஒன்றினால் வழங்கப்பட்ட சட்டமாணிப் பட்டம் (LLB) (2 ஆம் தர கீழ் நிலைச்சித்தி) | 05 புள்ளிகள் |
| | | (v) அரசு இலங்கை சட்டக் கல்லூரியில் இறுதி பரீட்சையில் 1 ஆம் தர சிறப்புச் சித்தி | 08 புள்ளிகள் |
| | | (vi) இலங்கை சட்டக் கல்லூரியில் இறுதி பரீட்சை யில் 2 ஆம் தர சிறப்புச் சித்தி | 05 புள்ளிகள் |
| | | அரசினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் என்பது சட்டக் கல்வி கூட்டு இணைவுச் சபை யினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் அல்லது ஓர் நிறுவனம். (மேலே கூறப்பட்ட அனைத்து தகைமைகளுக்கு 20 புள்ளிகள் அடங்கும்)<br>மேல் கூறப்பட்ட கல்வித் தகைமைகள் சான்றுகள் மூலம் நிரூபிக்கப்படுதல் வேண்டும். | |

| *விடயம்* | *அதிகூடிய புள்ளிகள்* | *விபரணம்* | *புள்ளிகள்* |
|---|---|---|---|
| பதிவு செய்யப் பட்ட சட்டத் தரணி யாக தொழில் சார் அனுபவம் | 20 புள்ளிகள் | 1. பதிவு செய்யப்பட்ட சட்டத்தரணியாக சுறுசுறுப்பாகவும், வெற்றிகரமாகவும் கடமை யாற்றியிருத்தல், நீதிமன்றங்களில் வழக்கு களை கையாளுதல். (ஒவ்வொரு வருடத்துக்கும் 2 புள்ளிகள்) | 10 புள்ளிகள் |
| | | 2. அரச சட்டத்தரணியாக அல்லது அங்கீகரிக் கப்பட்ட நிறுவனம் ஒன்றில் வழக்குகளை கையாண்ட திறமை காணப்படுதல், பதிவு செய்யப்பட்ட சட்டத்தரணியாக சுறு சுறுப்பாகவும், வெற்றிகரமாகவும் செயற் பாட்டிற்கான திறமை காணப்படுதல். (மேற்கூறப்பட்ட திறமைகளுக்கு சான்றிதழ்கள் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்) | 10 புள்ளிகள் |
| | | நீதிபதி ஒருவரினால் வழங்கப்பட்ட சான்றிதழ் ஒன்றும் 20 வருடத்துக்கு குறையாத சேவையை பூர்த்தி செய்துள்ள 2 சட்டத்தரணிகளிடமிருந்தும் பெற்றுக்கொள்ளப்பட்ட நற்சான்றிதழ்கள் 2 உம் இணைக்கப்படுதல் வேண்டும். சட்டமா அதிபர் திணைக்களத்தில் சட்ட உத்தி யோகத்தர்களினால் வழங்கப்பட்ட சான்றிதழ்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. | |
| சிறப்புத் திறமை கள் | 50 புள்ளிகள் | (i) தொடர்பாடல் திறமைகள் | 12.5 புள்ளிகள் |
| | | (ii) சந்தர்ப்பத்துக்கு ஏற்ற பேச்சுத்திறன் | 12.5 புள்ளிகள் |
| | | (iii) சபையின் முன் வெற்றிகரமாக தோற்றும் திறமை | 12.5 புள்ளிகள் |
| | | (iv) மொழித் திறமை | 12.5 புள்ளிகள் |
| நேர்முகப் பரீட்சையில் காண்பித்த திறமைகள் | 10 புள்ளிகள் | (i) ஆளுமை | 5 புள்ளிகள் |
| | | (ii) தலைமைத்துவ இயல்புகள் | 5 புள்ளிகள் |

**இறுதி கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சை**

| *சரிபார்க்கப்பட்டதன் பின் புள்ளி வழங்குவதற்கான பிரதான விடயங்கள்* | *அதிகூடிய புள்ளிகள்* |
|---|---|
| (i) தர்க்க திறமை | 25 |
| (ii) தரவுகளை முன்வைக்கும் திறமை | 25 |
| (iii) கேள்விகளுக்கு பதிலளிக்கும் திறமை | 25 |
| (iv) அடிப்படை சட்டக் கொள்கைகளில் அறிவு | 25 |
| மொத்தம் | 100 புள்ளிகள் |

*6.* **விண்ணப்பதாரிகளின் ஆளடையாளம்**.- சகலவிதத்திலும் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவங்களைச் சமர்ப்பித்துள்ள விண்ணப்பதாரிகள் மாத்திரமே கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

நேர்முகப் பரீட்சையில் சகல சான்றிதழ்களினதும் மூலப்பிரதியும் உரிய முறையில் அத்தாட்சிப்படுத்தப்பட்ட புகைப்படப் பிரதிகளையும் முன்வைத்தல் வேண்டும்.

நேர்முகப் பரீட்சையில் தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக கீழ்க்காணும் ஆளடையாள ஆவணங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் :

(அ) ஆட்களைப் பதிவுசெய்யும் ஆணையாளரினால் வழங்கப்பட்ட தேசிய ஆள் அடையாள அட்டை ;
(ஆ) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு.

*7.* **விண்ணப்பங்களை சமர்ப்பிக்கும் முறை** :

(i) விண்ணப்பங்கள் நிருவாகப் பிரிவு, சட்டமா அதிபர் திணைக்களம், கொழும்பு 12 இல் பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் அவ்விண்ணப்பம் 2016.08.31 ஆந் திகதி அன்றோ அல்லது அதற்கு முன்னரோ கிடைக்கத்தக்கவாறு "சட்டமா அதிபர் திணைக்களம், த. பெ. 502, கொழும்பு 12" இற்கு அனுப்பிவைக்கப்படல் வேண்டும். உரிய திகதியின் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

(ii) தபால் உறையின் இடது மேல் மூலையில் "கனிஷ்ட உதவி அரச சட்டவாதிக்கான விண்ணப்பம்" என குறிப்பிடப்படல் வேண்டும்.

*8.* **போலியான தகவல்களை வழங்குதல்**.- தங்களால் அனுப்பி வைக்கப்படும் விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனுமொரு தகவல் போலியானது அல்லது பிழையானது என ஆட்சேர்ப்புச் செய்யப்படும் முன் கண்டுபிடிக்கப்பட்டால் தங்களின் அபேட்சகத் தன்மை நிராகரிக்கப்படும். அவ்விதமான போலியான அல்லது பிழையான தகவலொன்று ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டதன் பின் கண்டுபிடிக்கப்பட்டால் அதற்குரிய நடவடிக்கைகளின் பிரகாரம் சேவையிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

*9.* வெற்றிடங்களை நிரப்புவதற்கான அல்லது நிரப்பாதிருக்கதற்கான உரிமை அரசாங்க சேவை ஆணைக்குழுவுக்கே உரியதாகும்.

*10.* இந்த அறிவித்தல் சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில மொழிப்பதங்களுக்கிடையே ஏதேனும் முரண்பாடுகள் தோன்றின், அதன்போது சிங்கள மொழிப் பதங்களே மேலோங்கி நிற்கும்.

அரச சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளையின் பேரில்,

சட்டமா அதிபர்.

உயர் நீதிமன்ற கட்டிடத் தொகுதி,
சட்டமா அதிபர் திணைக்களம்,
கொழும்பு 12,
2016, யூலை 08.

7-955

---

## நீதி அமைச்சு

*1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் 108 ஆம் பிரிவின்கீழ் (திடீர்) மரண விசாரணையாளர்களை நியமிப்பதற்காக விண்ணப்பங்களைக் கோருதல்*

இதன்கீழ் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள பிரதேசங்களில் வெற்றிடமாகவுள்ள (திடீர்) மரண விசாரணையாளர் பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

*2.* பின்வரும் மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைவாக தயார் செய்யப்பட்ட விண்ணப்பங்கள் "செயலாளர், நீதி அமைச்சு, மீயுயர் நீதிமன்றக் கட்டிடத் தோகுதி, கொழும்பு 12" என்னும் முகவரிக்கு 2016.08.22 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னராகவோ கிடைக்கக்கூடியவாறு பதிவு அஞ்சலில் அனுப்பிவைக்கப்படுதல் வேண்டும். விண்ணப்பத்தை இட்டு

அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "(திடீர்) மரண விசாரணையாளர் பதவி, .................. மாவட்டம்" எனக் குறிப்பிடப்படுதல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கப்பெறுகின்ற விண்ணப்பங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும்.

3. இப்பதவி அரசாங்கத்தின் நிரந்தரப் பதவியொன்றல்ல. இப்பதவிக்கு நியமிக்கும் திகதி தொடக்கம் ஐந்து ஆண்டு காலத்துக்கு செல்லுபடியாகின்றவாறு இப்பதவியில் நியமிக்கப்படுவதுடன், சம்பந்தப்பட்ட பிரதேசத்தின் நீதிவானினதும், பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியினதும் சிபார்சுகள் மற்றும் மருத்துவ சிபார்சுகளை ஆராய்ந்து பார்த்து சேவை நீடிப்புச் செய்யப்படலாம். இப்பதவியை வகிக்கும் உச்ச வயதெல்லை 70 வயதை விஞ்சுதலாகாது. ஆயினும் அதற்கு முன்னர் எச்சந்தர்ப்பத்திலும் (திடீர்) மரண விசாரணையாளர் ஒருவர் காரணங்களைக் காட்டி சேவையிலிருந்து நீக்கஞ் செய்யப்படலாம். நியமனங்கள் வழங்கப்படுகின்ற வெற்றிடமாகியுள்ள (திடீர்) மரண விசாரணையாளர் பிரிவுகள் பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன.

4. 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைவாக (திடீர்) மரண விசாரணையாளர்களின் பணிகள் நியமனம் பெறுபவர்களினால் நிறைவேற்றப்படுதல் வேண்டும்.

5. இப்பதவிக்காக சம்பளம் எதுவும் செலுத்தப்பட மாட்டாது. எனினும் மரண விசாரணையொன்றுக்காக 500 ரூபா கட்டணமொன்றும், மரண விசாரணையாளர்களுக்காக அங்கீகரிக்கப்பட்ட பிரயாணச் செலவுகள் மற்றும் இணைந்த படிகளும் செலுத்தப்படும்.

6. பின்வரும் தேவைகளைப் பூர்த்திசெய்துள்ளவர்கள் மாத்திரமே விண்ணப்பிக்கலாம் :-

(அ) இலங்கைப் பிரசையொருவராக இருத்தல் ;

(ஆ) நியமனத்தை எதிர்பார்க்கும் பிரதேசத்தைக் கடந்த இரண்டு வருடமாக வதிவிடமாகக் கொண்டிருத்தல் ;

(இ) விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளன்று 30 வயதுக்குக் குறையாதவராகவும் 62 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும் ;

(ஈ) க. பொ. த. (உ. த.) பரீட்சையில் 3 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் (விஞ்ஞான பாடங்களில் சித்தியடைந்திருப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்) ;

(உ) திடீர் மரண விசாரணையாளர் (முஸ்லிம்) பதவிக்காக விண்ணப்பிக்கும் அபேட்சகர்கள் தமிழ் மொழியில் பேச மற்றும் எழுதக்கூடியவர்களாக இருத்தல் வேண்டும் ;

7. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்ற இறுதி நாளன்று அரசாங்கத்திடமிருந்து மாகாண சபை நிதியமொன்றிலிருந்து அல்லது உள்ளூராட்சி நிறுவனமொன்றின் நிதியமொன்றிலிருந்து சம்பளம் அல்லது படிகளைப் பெறுகின்ற ஆட்களும் அரசாங்க கூட்டுத்தாபனங்களில் கூட்டுறவுச் சங்கங்களின் ஊழியர்கள் மற்றும் பணிப்பாளர் சபைகளின் உறுப்பினர்களும், மாகாண சபை உறுப்பினர்கள் அல்லது உள்ளூராட்சி நிறுவனங்களின் உறுப்பினர்களும் இப்பதவிக்காக விண்ணப்பிப்பதற்கு தகுதியற்றவர்களாவர்.

8. விண்ணப்பத்துடன் எந்தவொரு ஆவணமும் இணைத்து அனுப்பப்படுதலாகாது. ஆயினும், நேர்முகப் பரீட்சையின்போது விண்ணப்பதாரரால் எல்லாத் தகைமைகளையும் உறுதிப்படுத்துவதற்குப் போதுமான அளவு சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென்பதுடன் பின்வரும் ஆவணங்களின் மூலப்பிரதிகளும் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும் :

(அ) பிறப்புச் சான்றிதழ் ;

(ஆ) கல்விச் சான்றிதழ் ;

(இ) தேசிய அடையாள அட்டை ;

(ஈ) நிரந்தர வதிவிடத்தை உறுதிப்படுத்தும் கிராம உத்தியோகத்தரின் சான்றிதழ் ;

(உ) அண்மையில் பெறப்பட்ட நல்லொழுக்கச் சான்றிதழ்கள் இரண்டு ;

(ஊ) மேலதிக தகைமைகளை உறுதிப்படுத்துவதற்கான வேறு சான்றிதழ்கள் ;

(எ) ஓய்வுபெற்ற விண்ணப்பதாரர்களின் ஓய்வுபெற்ற திகதியை உறுதிப்படுத்தும் எழுத்திலான சான்றிதழ்.

9. எல்லா விண்ணப்பங்களும் பின்வரும் படிவத்திற்கமைய தெளிவான எழுத்தில் பூர்த்திசெய்யப்படுதல் வேண்டும். தேவையான தகவல்கள் அனைத்தும் உள்ளடக்காமல் சமர்ப்பிக்கப்படுகின்ற விண்ணப்பங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும்.

10. விண்ணப்பப்படிவங்களை நிரப்பும்போது தகைமைகள் பற்றிய உண்மையான விபரங்களை உள்ளடக்குதல் வேண்டும். மேலே 7 ஆம் பந்தியில் குறிப்பிட்டுள்ள வகுதியைச் சேர்ந்த அல்லது இல. 6 அல்லது 8 ஆம் பந்திகளுக்காக பொய்யான தகவல்களை வழங்குகின்ற பரீட்சார்த்திகள் நேர்முகப் பரீட்சையில் தெரிவுசெய்யப்பட்டு நியமனங்கள் வழங்கப்பட்டதன் பின்னர் உண்மையான நிலைமை தெரியவருமிடத்து அத்தகைய விண்ணப்பதாரர்களின் நியமனங்கள் உடனேயே இரத்துச்செய்யப்படும்.

11. மேலும் திடீர் மரண விசாரணையாளராக நியமிக்கப்பட்டதன் பின்னர் மேலே 9 ஆம் பந்தியின் பதவியொன்று நியமிக்கப்பட்டிருப்பின் அவ்வாறு நியமனம்பெற்ற திகதி தொடக்கம் இந்நியமனம் இல்லாதொழிக்கப்படும்.

பத்மசிறி ஜயமான்ன,
செயலாளர்,
நீதி அமைச்சு.

நீதி அமைச்சு,
கொழும்பு 12,
2016, யூன் 30.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**திடீர் மரண விசாரணையாளர் பதவி**

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் | | பிரதேச செயலாளர் பிரிவு | |
| சம்பந்தப்பட்ட நீதிவான் நீதிமன்றம் | | திடீர் மரண விசாரணையாளர் பிரிவு | |
| சம்பந்தப்பட்ட பொலிஸ் நிலையம் | | வதியும் கிராம உத்தியோகத்தர் பிரிவும் இலக்கமும் | |

1. (அ) முதலெழுத்துக்களுடன் பெயர் (தெளிவான எழுத்தில்) :----.
(குடும்பப் பெயரின்கீழ் கோடிடுக.)
(ஆ) முதலெழுத்துக்கள் குறிக்கும் பெயர்கள் :----.

2. முகவரி :----.

3. தொலைபேசி இலக்கம் :----.

4. தேசிய ஆள் அடையாள அட்டைஇலக்கம் :----.

5. பிறந்த திகதி :----.

6. 2016.08.22 ஆந் திகதிக்கு வயது :----.
வருடங்கள் ---- மாதங்கள் ---- நாட்கள் ----

7. பால் : ஆணா/பெண்ணா என்பது :----.

8. கல்வித் தகைமைகள் :----.

(i) க. பொ. த. (சா. த.) பரீட்சை :

| பாடம் | தரம் | ஆண்டு | பாடம் | தரம் | ஆண்டு |
|---|---|---|---|---|---|
| | | | | | |

(ii) க. பொ. த. (உ. த.) பரீட்சை :

| பாடம் | தரம் | ஆண்டு | பாடம் | தரம் | ஆண்டு |
|---|---|---|---|---|---|
| | | | | | |

9. தொழிற்றகைமைகள் :----.

10. தற்போதைய தொழில் :----.

11. முன்னர் புரிந்த தொழில் :----.

12. (அ) அரசாங்கத்தில்/ அரசாங்கக் கூட்டுத்தாபனமொன்றில்/ கூட்டுறவுச் சங்கமொன்றில் அல்லது உள்ளூராட்சி நிறுவனமொன்றில் தொழில் புரிகின்றீரா ? :----.

(ஆ) அத்தகைய சேவையொன்றிலிருந்து விலகி/ ஓய்வுபெற்றிருப்பின் விலகியதற்கான/ ஓய்வுபெற்றதற்கான காரணம் :----.

(இ) விலகியமை/ ஓய்வுபெற்றமை அங்கீகரிக்கப்பட்ட திகதி :----.

13. (அ) உமக்கெதிராக எப்போதாவது தொழில்தருநரால் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா ? :----.

(ஆ) அவ்வாறாயின் குற்றச்சாட்டின் தன்மையும் பெறுபேறுகளும் :----.

14. (அ) (i) ஏதேனுமொரு தவறுக்கு எப்போதாயினும் உமக்கெதிராக நீதிமன்றத்தில் வழக்கொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளதா ? :----.

(ii) நீங்கள் சம்பந்தப்பட்ட பிணக்கொன்றை மத்தியஸ்தம் செய்வதற்காக எப்போதாயினும் மத்தியஸ்த சபைக்கு முறைப்பாடொன்று ஆற்றுப்படுத்தப்பட்டுள்ளதா ? :----.

(ஆ) அவ்வாறாயின் அதன் பெறுபேறு :----.

15. (அ) தற்போது (திடீர்) மரண விசாரணையாளர் பதவியொன்றை வகிக்கின்றீரா ? :----.

(ஆ) அவ்வாறாயின், முதலாம் நியமனத்தைப் பெற்ற திகதி மற்றும் அமைச்சின் கோவை இலக்கம் :----.

16. இப்பதவிக்காக பிற தகைமைகள் எவையேனும் இருப்பின் அவை பற்றிய விபரம் :----.

17. நல்லொழுக்கச் சான்றிதழ்களை வழங்கும் இரு ஆட்களினதும் பெயர்கள், முகவரிகள் மற்றும் பதவிப் பெயர்கள் :-

(i) :----.
(ii) :----.

என்னால் மேலே தரப்பட்டுள்ள தகவல்கள் யாவும் உண்மையானவையும், சரியானவையும் என உறுதிப்படுத்துகிறேன்.

----,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :----.

## அட்டவணை

### மாத்தறை மாவட்டம்

| *பிரதேச செயலாளர் பிரிவு* | *திடீர் மரண விசாரணையாளர் பிரிவு* | *கிராம உத்தியோகத்தர் பிரிவும்* | *இலக்கமும்* |
|---|---|---|---|
| தெவிநுவர | தெவிநுவர | தெவிநுவர வடக்கு | 432 |
| | | தெவிநுவர மத்தி | 432 ஏ |
| | | தெவிநுவர தெற்கு | 433 |
| | | தெவிநுவர மேற்கு | 433 ஏ |
| | | தெவிநுவர கிழக்கு | 433 பி |
| | | தெவிநுவர | 433 சீ |
| | | தெவிநுவர நுகேகொட | 433 டீ |
| | | தெவிநுவர தெவிநுவர வவ்வ | 433 ஈ |
| | | தெவிநுவர சிங்காசன இடம் | 433 எப் |
| | | தெவிநுவர வெலேகொட | 433 ஜீ |
| | | தெவிநுவர பிரதீபாகார | 433 எச் |
| | | கபுகம மேற்கு | 435 |
| | | கந்தராவத்த தெற்கு | 435 ஏ |
| | | கபுகம கிழக்கு | 436 |
| | | தெல்கல்ல | 436 ஏ |
| | | கபுகம வடக்கு | 436 பி |
| | | கபுகம கிழக்கு | 436 சீ |
| | | கந்தர மேற்கு | 437 |
| | | கந்தர கிழக்கு | 437 ஏ |
| | | கந்தர தெற்கு | 437 பி |
| | | கந்தர மத்தி | 437 சீ |
| | | தலல்ல தெற்கு | 438 |
| | | தலல்ல மத்தி | 438 ஏ |
| | | தலல்ல கிழக்கு | 438 பி |
| | | தலல்ல | 438 சீ |
| | | தலல்ல வடக்கு | 439 |
| | | நாஔட்டுன்ன | 442 |
| | | நாஔட்டுன்ன மத்தி | 442 ஏ |
| | | நாஔட்டுன்ன தெற்கு | 442 பி |
| | | நாஔட்டுன்ன வடக்கு | 442 சீ |
| கொட்டபொல | பல்லேகம | பல்லேகம வடக்கு | 241 |
| | | கிறிவெல்தோல | 241 ஏ |
| | | பல்லேகம தெற்கு | 241 பி |
| | | பாதவல நாதகந்த | 241 டீ |
| | | நிசங்கபுர | 241 ஈ |
| | | கீறிவலகம | 241 ஜீ |
| | தெனியாய | பட்டேயாய | 241 சீ |
| | | கந்தில்பான | 241 எச் |
| | | தெனியாய | 243 |
| | | தெனியாய மேற்கு | 243 ஏ |
| | | இகலகம | 243 பி |
| | | விஹாரஹேன | 244 |
| | | தெனிபிட்ட | 244 ஏ |
| | | களுகலஹேன | 244 பி |
| | | அடாரதெனிய | 244 சீ |

| பிரதேச செயலாளர் பிரிவு | திடீர் மரண விசாரணையாளர் பிரிவு | கிராம உத்தியோகத்தர் பிரிவும் | இலக்கமும் |
|---|---|---|---|
| வெலிகம | வெலிகம கிராமிய | மூதுகமுவ கிழக்கு | 378 |
| | | மூதுகமுவ மேற்கு | 378 பி |
| | | பாதேகம | 379 |
| | | பிட்டதுவ | 379 ஏ |
| | | வலான | 379 பி |
| | | மிதிகம கிழக்கு | 380 |
| | | குறுபெபில | 380 ஏ |
| | | மிதிகம மேற்கு | 381 |
| | | மிதிகம வடக்கு | 381 ஏ |
| | | வேகட | 381 பி |
| | | தேனுவல | 381 சீ |
| | மிறிஸ்ஸ | பெலேன தெற்கு | 387 பி |
| | | பெலேன வடக்கு | 387 சீ |
| | | பொல்வத்த | 388 |
| | | பொல்வதுமோதர | 388 ஏ |
| | | நிதன்கல | 399 ஏ |
| | | கொட்டவில தெற்கு | 404 |
| | | கொட்டவில வடக்கு | 404 ஏ |
| | | கொட்டவில மேற்கு | 404 பி |
| | | மிறிஸ்ஸ வடக்கு | 405 |
| | | மிறிஸ்ஸ உடுபில | 405 ஏ |
| | | மிறிஸ்ஸ உடுமுல்ல | 405 பி |
| | | ஹேன்வல கிழக்கு | 405 சீ |
| | | ஹேன்வல மேற்கு | 405 டீ |
| | | மிறிஸ்ஸ தெற்கு I | 406 |
| | | மிறிஸ்ஸ தெற்கு II | 406 ஏ |
| | | தல்அரம்ப தெற்கு | 407 |
| | | பண்டரமுல்ல | 407 ஏ |
| | | தல்அரம்ப வடக்கு | 407 பி |
| | | தல்அரம்ப கிழக்கு | 407 சீ |
| | | கம்புறுகமுவ வடக்கு | 408 |
| | | கம்புறுகமுவ மேற்கு | 408 ஏ |
| | | கறாண்டுவ | 408 பி |
| | | கம்புறுகமுவ தெற்கு | 408 சீ |
| | | துடெல்ல | 408 டீ |
| ஹக்மன | உடுபீல்லகொட | பனன்வெல மேற்கு | 282 |
| | | பனன்வெல கிழக்கு | 282 ஏ |
| | | வேபதஇர வடக்கு | 283 |
| | | வேபதஇர தெற்கு | 283 ஏ |
| | | கெபிலியபொல வடக்கு | 284 |
| | | கெபிலியபொல தெற்கு | 284 ஏ |
| | | கங்கொடகம | 286 |
| | | பொத்தேவெல | 286 ஏ |
| | | கொஹுலியத்த | 286 பி |
| | | கம்மெதபிட்டிய | 286 சீ |
| | | உடுபீல்லகொட கிழக்கு | 294 |
| | | உடுபீல்லகொட மேற்கு | 294ஏ |
| | | லால்பே | 294 பி |
| | | கோங்கல கிழக்கு | 295 |
| | | கோங்கல தெற்கு | 295சீ |

| பிரதேச செயலாளர் பிரிவு | திடீர் மரண விசாரணையாளர் பிரிவு | கிராம உத்தியோகத்தர் பிரிவும் | இலக்கமும் |
|---|---|---|---|
| திஹகொட | வட்டகெதர | நாதுகல I | 337 |
| | | வட்டகெதர | 337ஏ |
| | | நாதுகல II | 337 பி |
| | | வட்டகெதர கிழக்கு | 337 சீ |
| | | பாலட்டுவ | 340 |
| | | உனெல்ல | 340 ஏ |
| | | எலம்பதலாகொட | 340 பி |
| | | தெமட்டஹெட்டிகொட | 340சீ |
| | | எத்துடாவ | 341 |
| | | எத்துடாவ மேற்கு | 341 ஏ |
| அத்துரலிய | போபகொட | ஊறுமுத்த | 304 |
| | | கெஹெல்வல | 304ஏ |
| | | ஊறுமுத்த தெற்கு | 304பி |
| | | வெலிஹேன | 305 |
| | | திவிதுர | 305 ஏ |
| | | தெமட்டபாஸ்ஸ | 305 பி |
| | | தலமஹகம கிழக்கு | 306 |
| | | தலமஹகம மேற்கு | 306 ஏ |
| | | வேனகம | 306 பி |
| | திப்பொட்டுவாவ | ஹப்பெ | 306 சீ |
| | | பானதுகம | 308 |
| | | கொடபிட்டிய | 308 ஏ |
| | | கனஹலகம | 308 பி |
| | | மாரகொட | 308 சீ |
| அக்குரெஸ்ஸ | அக்குரெஸ்ஸ 01 | பரதுவ வடக்கு | 359 |
| | | பரதுவ தெற்கு | 359 ஏ |
| | | பரதுவ கிழக்கு | 359 பி |
| | | மெலெவ்வ | 359 சீ |
| | | அக்குரெஸ்ஸ | 360 |
| | | யகாபெத்த | 360 ஏ |
| | | இகல கியாண்டுவ | 360 பி |
| | | கலபடஹேன | 360 சீ |
| | | போரம்ப | 361 ஏ |
| | | இலுபெல்ல | 361 பி |
| | | இம்புல்கொட | 361 சீ |
| | | கங்ஹெல | 362 |
| | | மினிபோகொட | 362 ஏ |
| | | அஸ்மகொட | 362 பி |
| | | மாரம்ப தெற்கு | 363 |
| | | மாரம்ப வடக்கு | 363 ஏ |
| | | லேனம தெற்கு | 363 பி |
| | | பெத்தபிட்டிய தெற்கு | 363 சீ |
| | | பெத்தபிட்டிய வடக்கு | 363 டீ |
| | | ஹுலந்தாவ | 363 ஈ |
| | | லேனம வடக்கு | 363எவ் |
| | | உந்துபிட்டிய | 363 ஜீ |
| | | இந்திகட்டுதெனிய | 363எச் |
| | | தியலபே | 364 |
| | | ஹிக்கொட | 364 ஏ |

| பிரதேச செயலாளர் பிரிவு | திடீர் மரண விசாரணையாளர் பிரிவு | கிராம உத்தியோகத்தர் பிரிவும் | இலக்கமும் |
|---|---|---|---|
| | | எரமுதுகொட | 365 |
| | | மாணிக்கொட | 365 ஏ |
| | | கெட்டன்வில | 366 |
| | | ஹேனேகம | 370 |
| | | ஹேனெகம மேற்கு | 370 ஏ |
| | | பரகஹவத்த | 370 பி |
| | | நிமலவ | 371 |
| | | கல்லல | 371 ஏ |
| | | நிமலவ கிழக்கு | 371 பி |
| பஸ்கொட | ஊறுபொக்க | கின்னலிய கிழக்கு | 246 |
| | | கின்னலிய மேற்கு | 246 பி |
| | | கின்னலிய வடக்கு | 246 சீ |
| | | கின்னலிய தெற்கு | 246 டீ |
| | | கிறிபிட்டிய கிழக்கு | 249 |
| | | ஊறுபொக்க | 249 ஏ |
| | | மெகிலியதென்ன | 249 பி |
| | | ஹீகொட | 249 சீ |
| | | கிறிபிட்டிய மேற்கு | 249 டீ |
| | | தம்பகல கிழக்கு | 253 |
| | | தம்பகல மேற்கு | 253 ஏ |
| | | ஹுலன்கந்த | 253 பி |
| | பெரலபனாதர | கெட்டவல | 246 ஏ |
| | | பட்டிகல | 246ஈ |
| | | பெரலபனாதர வடக்கு | 250 |
| | | பெரலபனாதர தெற்கு | 250ஏ |
| | | கெக்குன்தெனிய | 250பி |
| | | தலபலகந்த | 250சீ |
| | | விஜயகம | 250 டீ |
| | | பாதவிட்ட | 250ஈ |
| | | கிரிலிபன | 251 |
| | | பட்டாதுர வடக்கு | 251ஏ |
| | | மொரகல | 251பி |
| | | மொலொக்கமுவ வடக்கு | 251சீ |
| | | மொலொக்கமுவ தெற்கு | 251 டீ |
| | | பட்டாதுர தெற்கு | 251 ஈ |
| மாலிம்பட | தெலிஜ்ஜவில | மாலிம்பட வடக்கு | 350 |
| | | கட்டுவன்கொட | 350 ஏ |
| | | மாலிம்பட மேற்கு | 351 |
| | | கிறிமெட்டிமுல்ல வடக்கு | 351 ஏ |
| | | கிறிமெட்டிமுல்ல தெற்கு | 351 பி |
| | | கடுகன்ன | 353 |
| | | தெலிஜ்ஜவில | 353 ஏ |
| | | உனிந்துவெல | 353 பி |
| | | ஹொரகொட கிழக்கு | 355 |
| | | அல்கிறிய | 355 ஏ |
| | | பகல கியாடுவ | 355 பி |
| | | ஹொரகொட மேற்கு | 355 சீ |
| | | ஹொரகொட தெற்கு | 355 டீ |
| | | நாபே | 355 ஈ |

| பிரதேச செயலாளர் பிரிவு | திடீர் மரண விசாரணையாளர் பிரிவு | கிராம உத்தியோகத்தர் பிரிவும் | இலக்கமும் |
|---|---|---|---|
| | | தம்பெல்ல | 356 |
| | | கத்துவ | 356 ஏ |
| | | வெலனாகொட | 356 பி |
| | | கெக்குணவெல | 357 |
| | | மாரகொட | 357 ஏ |
| | | அக்குறுகொட கிழக்கு | 400 |
| | | அக்குறுகொட மேற்கு | 400 ஏ |
| | | அக்குறுகொட தெற்கு | 400 பி |
| | | அக்குறுகொட வடக்கு | 400 சீ |
| | | மாலிம்பட தெற்கு | 402 |
| | | மாலிம்பட கிழக்கு | 402 ஏ |
| | | கல்பாமுண | 402 பி |
| | | சுல்தானாகொட மேற்கு | 403 |
| | | சுல்தானாகொட தெற்கு | 403 ஏ |
| | | சுல்தானாகொட கிழக்கு | 403 பி |
| வெலிபிட்டிய | கனங்கே | போரம்ப கனங்கே வடக்கு | 372 |
| | | போரம்ப கனங்கே தெற்கு | 372 ஏ |
| | | நலவன | 372 பி |
| | | புகுலஹேன | 372 சீ |
| | | வாகல கனங்கே வடக்கு | 373 |
| | | நிவிதிவெல்பொக்க | 373 ஏ |
| | | வாகல கனங்கே தெற்கு | 373 பி |
| | | ஹல்லல | 375 |
| | | பாதிலி கொக்மாதுவ | 375 ஏ |
| | | சகபந்து கொக்மாதுவ | 375 பி |
| | | கொக்மாதுவ வடக்கு | 375 சீ |
| | வெலிபிட்டிய | பெரலேலிய | 375 டீ |
| | | பத்தலஹேன | 375 ஈ |
| | | இப்பாவல | 376 |
| | | விலேகொட | 376 ஏ |
| | | ஜம்புரகொட கிழக்கு | 377 |
| | | பலல்ல | 377ஏ |
| | | ஜம்புரகொட மேற்கு | 377 பி |
| | | பொரால | 378 ஏ |
| | | தெனிபிட்டிய கிழக்கு | 391 |
| | | தெனிபிட்டிய மேற்கு | 391 ஏ |
| | | தெனிபிட்டிய மத்தி | 391 பி |
| | | மதுராகொட | 391 சீ |
| | | மூனமல்பெ | 392 |
| | | உடுகாவ தெற்கு | 392 ஏ |
| | | உடுகாவ வடக்கு | 392 பி |
| | | வெல்லான | 394 |
| | | பெனேட்டியன கிழக்கு | 394 ஏ |
| | | பெனேட்டியன மேற்கு | 394 பி |
| | | கபுவத்த | 396 |
| | | வெலிபிட்டிய | 396 ஏ |
| | | வட்டகெதரமுல்ல | 397 |
| | | ஊறுவிட்டிய | 397 ஏ |
| | | மீருப்ப | 397 பி |
| | | ஜயவிக்கிரமபுர | 397 சீ |
| | | வறக்கபிட்டிய வடக்கு | 399 |
| | | வறக்கபிட்டிய தெற்கு | 399 பி |
| | | வறக்கபிட்டிய கிழக்கு | 399 சீ |

| *பிரதேச செயலாளர் பிரிவு* | *திடீர் மரண விசாரணையாளர் பிரிவு* | *கிராம உத்தியோகத்தர் பிரிவும் இலக்கமும்* | |
|---|---|---|---|
| பிட்டபெத்தர | தேரங்கல | கொறக்கவெல | 261 |
| | | பிட்டபெத்தர | 261 ஏ |
| | | தேரங்கல | 261 பி |
| | | கிறிவெல்கெலே தெற்கு | 261 சீ |
| | | கதுருவான | 261 டீ |
| | | தென்னஹேன | 261 ஈ |
| | | கிறிவல்கெலே வடக்கு | 261 எப் |
| | | குடகலஹேன | 261 எச் |
| | அலபலாதெனிய | அலபலாதெனிய வடக்கு | 258 |
| | | ஈதண்டுகித கிழக்கு | 258 ஏ |
| | | அலபலாதெனிய தெற்கு | 258 பி |
| | | ஈதண்டுகித மேற்கு | 258 சீ |
| | | களுபோவிட்டியன | 259 |
| | | தங்கல கிழக்கு | 259 ஏ |
| | | தங்கல மேற்கு | 259 பி |
| | | அம்பேவெல | 259 சீ |
| | | கலபட | 259 டீ |
| | | பானகல கிழக்கு | 260 |
| | | பானகல மேற்கு | 260 ஏ |
| | வெலிவ | தலபெகும்புர | 261 ஜீ |
| | | வெலிவ | 262 ஏ |
| | | ரம்புகன கிழக்கு | 262 பி |
| | | கொடிகாரகொட மேற்கு | 262 சீ |
| | | கொஸ்னில்கொட | 262 டீ |
| | | அலுவன | 262 ஈ |
| | | பரதுபல்ல | 262 எவ் |
| | | ரம்புகன மேற்கு | 262 ஏ |
| | | கொடிகாரகொட கிழக்கு | 262 எச் |
| | | வனசிங்கந்த | 263 எப் |

**காலி மாவட்டம்**

| *பிரதேச செயலாளர் பிரிவு* | *திடீர் மரண விசாரணையாளர் பிரிவு* | *கிராம உத்தியோகத்தர் பிரிவும் இலக்கமும்* | |
|---|---|---|---|
| ஹிக்கடுவ | திராணகம ஹிக்கடுவ | தொடன்துவ | 51 |
| | | உடுஹல்பிட்டிய | 51ஏ |
| | | மோதரபட்டுவத | 52 |
| | | தொடன்துகொட | 52ஏ |
| | | பட்டுவத | 53 |
| | | கம்மடுவத்த | 53ஏ |
| | | ஹென்னதோட்ட | 53பி |
| | | திராணகம | 54 |
| | | திராணகம வெல்லபட | 54ஏ |
| | | கட்டுகொலிஹ | 55 |
| | | பிங்கந்த | 55ஏ |
| | | தெல்கஹதுவ | 55பி |
| | | ஹந்தஉடுமுல்ல | 55சீ |
| | | நாரிகம | 56 |
| | | நாரிகம வெல்லபட | 56ஏ |

| பிரதேச செயலாளர் பிரிவு | திடீர் மரண விசாரணையாளர் பிரிவு | கிராம உத்தியோகத்தர் பிரிவும் | இலக்கமும் |
|---|---|---|---|
| | | குடா வேவல | 56பி |
| | | வேவல | 57 |
| | | பன்னம்கொட | 57ஏ |
| | | மில்லகொட | 57பி |
| | | வவுலகொட மேற்கு | 58 |
| | | வவுலகொட கிழக்கு | 58ஏ |
| | | ஹிக்கடுவ மேற்கு | 59 |
| | | ஹிக்கடுவ நகர | 59ஏ |
| | | ஹிக்கடுவ மத்தி | 59பி |
| | | நலாகஸ்தெனிய | 59சீ |
| | | வெள்ளவத்த | 59டீ |
| | | நாகந்த | 59ஈ |
| | | தொட்டகமுவ | 61 |
| | | கலுபே | 62 |
| | | உடுமுல்ல | 62ஏ |
| | | மெதகொட | 62பி |
| | மகஹேகொட | பிட்டிவெல்ல வடக்கு | 42 |
| | | பிட்டிவெல்ல தெற்கு | 42ஏ |
| | | கதுருபே | 43 |
| | | கெந்தல | 43ஏ |
| | | பூஸா | 44 |
| | | ரூபீவல | 44ஏ |
| | | கனேகொட | 44பி |
| | | கபுமுலுகொட | 44சீ |
| | | ரத்ன உதாகம | 44டீ |
| | | தோலிகந்த | 44ஈ |
| | | மகஹேகொட | 45 |
| | | மலிதுவ | 45ஏ |
| | | மெதவல | 45பி |
| | | பாலந்திரியாகொட | 45சீ |
| | | ஹேகொட | 45டீ |
| | | ரெஜ்ஜிபுர | 45ஈ |
| | மாதம்பெ | அக்குரல | 76 |
| | | அக்குரல தெற்கு | 76ஏ |
| | | அக்குரல வடக்கு | 76பி |
| | | வேனமுல்ல | 77 |
| | | அந்துரன்கொட | 77ஏ |
| | | திம்புல்துவ | 77பி |
| | | குயீகொட மேற்கு | 78 |
| | | கலாகொட கிழக்கு | 78ஏ |
| | | குலீகொட கிழக்கு | 78பி |
| | | கலாகொட மேற்கு | 78சீ |
| | | வெல்லபட | 79 |
| | | உஸ்முதுலாவ | 79ஏ |
| | | ஊரவத்த | 80 |
| | | இடன்தொட்ட | 80ஏ |
| | | தேவகொட கிழக்கு | 80பி |
| | | தேவகொட மேற்கு | 80சீ |
| | | தெல்தூவ | 80டீ |

| பிரதேச செயலாளர் பிரிவு | திடீர் மரண விசாரணையாளர் பிரிவு | கிராம உத்தியோகத்தர் பிரிவும் | இலக்கமும் |
|---|---|---|---|
| | வேரகொட | வெரெல்லன | 63 |
| | | சீனிகம மேற்கு | 64 |
| | | சீனிகம | 64ஏ |
| | | மலவென்ன | 65 |
| | | தெல்வத்த | 67 |
| | | பேரலிய வடக்கு | 67ஏ |
| | | பேரலிய தெற்கு | 67பி |
| | | தலுவதுமுல்ல | 67சீ |
| | | கஹவ | 69 |
| | | கொடகம தெற்கு | 70 |
| | | கொடகம வடக்கு | 70ஏ |
| | | உடுவரகொட தெற்கு | 71 |
| | | உடுவரகொட வடக்கு | 71ஏ |
| | | வேரகொட | 72 |
| | | கல்தூவ | 72ஏ |
| | | ஹரன்னகல | 72பி |
| | | டெல்மா குடியேற்றம் | 72சீ |
| எல்பிட்டிய | அம்பன | அம்பன | 94 |
| | | பிணிகஹன | 94ஏ |
| | | வத்துருவில | 94சீ |
| | | கஹதூவ | 94டீ |
| | | ஏரமுல்ல | 94ஈ |
| | | ரூகடஹென | 94எச் |
| | | திப்பொட்டுவாவ | 94ஜே |
| | | கஹதூவ தெற்கு | 94கே |
| | | அம்பன வடக்கு | 94எல் |
| | அமுகொட | மெட்டிவிலிய | 30ஏ |
| | | இந்திபலேகொட | 30பி |
| | | தெல்பொத | 30சீ |
| | | அமுகொட | 31 |
| | | தலகஸ்பெ | 31பி |
| | | திக்ஹேன | 31சீ |
| | | ஹிம்புட்டுகொட | 31டீ |
| | | கெல்லபத | 31ஈ |
| | | கெட்டென்தொல | |
| | | உடோவிட்ட | 31ஜீ |
| | | சித்தரகொட | 31எச் |
| | | தலகஸ்பெ மேற்கு | 31ஜே |
| கோனாபீனுவல | கோனாபீனுவல | ஹிக்கடுவ கிழக்கு | 59ஏ |
| | | ஆரச்சிகந்த | 59ஏ/1 |
| | | கோனாபீனுவல கிழக்கு | 60 |
| | | கோனாபீனுவல மேற்கு | 60ஏ |
| | | கோனாபீனுவல மத்தி | 60பி |
| | | வுட்லன்ட்வத்த | 60சீ |
| | | தோடம்கஹவில | 60டீ |
| | | கலுவகஹ குடியேற்றம் | 60ஈ |
| | | பேரதுடுவ | 66பி |

| பிரதேச செயலாளர் பிரிவு | திடீர் மரண விசாரணையாளர் பிரிவு | கிராம உத்தியோகத்தர் பிரிவும் இலக்கமும் | |
|---|---|---|---|
| நியாகம | மத்தக | வெயிஹென | 32 |
| | | மாரதுபிட்டிய | 32ஏ |
| | | கிம்புலாவல | 32பி |
| | | மத்தக | 34 |
| | | பம்பரவான | 34ஏ |
| | | போத்திவல மேற்கு | 34பி |
| | | போத்திவல கிழக்கு | 34சீ |
| | | லியனகம கந்த | 34ஏ1 |
| | | உஸ்பிம் குடியேற்றம் | 34ஏ2 |
| போபெ - போத்தல | போபெ | வட்டரெக கிழக்கு | 120 |
| | | மாம்பிட்டிய | 120ஏ |
| | | வக்வெல்ல | 121 |
| | | ஹபுகல | 123 |
| | | நிலதெனிய | 123ஏ |
| | | பெலவத்த | 123பி |
| | | அபேசுந்த வத்த | 123சீ |
| | | பெரலியதொல | 123டீ |
| | | கித்துலம்பிட்டிய | 124 |
| | | துன்ஹிரிபான | 124ஏ |
| | | சில்வகெவத்த | 124பி |
| | | கஹதூவவத்த | 124சீ |
| | | கலேகான தெற்கு | 125 |
| | | கலேகான வடக்கு | 125ஏ |
| | போத்தல | நராவல | 111 |
| | | மகதெனிய | 111ஏ |
| | | பன்வில | 111பி |
| | | வலவத்த | 111சீ |
| | | பாஸ்வத்த | 111டீ |
| | | அத்தரகொட | 111ஈ |
| | | முலன கிழக்கு | 111எவ் |
| | | முலன மேற்கு | 111ஜீ |
| | | போத்தல | 117 |
| | | மீபாவல | 117ஏ |
| | | பன்னமக | 117பி |
| | | பெனிதெனிய | 117சீ |
| | | உலுவிட்டிகே | 127 |
| | | ஓபாத | 127பி |
| | | பொகரமுல்லகொட | 127சீ |
| | | பங்களாவத்த | 127டீ |
| கடவத்சதர | காலிநகரம் | கும்பல்வெல்ல தெற்கு | 96 |
| | | மகமோதர | 96ஏ |
| | | கல்வடுகொட | 96பி |
| | | கலுவெல்ல | 96சீ |
| | | கோட்டை | 96டீ |
| | | றிச்மன்கந்த | 96ஈ |
| | | கந்தெவத்த | 96எப் |
| | | சீனகொரட்டுவ | 96ஜீ |
| | | மினுவான்கொட | 96எச் |
| | | ஒசன்கொட | 96ஐ |
| | | கும்பல்வெல்ல வடக்கு | 96ஜே |
| | | கோன்கஹ | 97 |

| பிரதேச செயலாளர் பிரிவு | திடீர் மரண விசாரணையாளர் பிரிவு | கிராம உத்தியோகத்தர் பிரிவும் இலக்கமும் | |
|---|---|---|---|
| | | வெலிவத்த | 97ஏ |
| | | மடபாதல | 97பி |
| | | பொக்குணவத்த | 97சீ |
| | | தங்கெதர கிழக்கு | 97டீ |
| | | மடவலமுல்ல தெற்கு | 98 |
| | | மடவலமுல்ல வடக்கு | 98ஏ |
| | | பட்டகன்வில | 98பி |
| | | சங்கமித்தபுர | 98சீ |
| | | தங்கெதர மேற்கு | 98டீ |
| | | மாகால்ல | 99 |
| | | தலாபிட்டிய | 99ஏ |
| | | பெட்டிகலவத்த | 99பி |
| | | மக்குலுவ | 99சீ |
| | | தேவாதுர | 99டீ |
| | | கட்டுகொட | 100 |
| | | தெவட்ட | 100ஏ |
| | | மாஇட்டிபே | 101 |
| | | தேத்துகொட தெற்கு | 101ஏ |
| | | மிலித்துவ | 101பி |
| | | தேத்துகொட வடக்கு | 101சீ |
| | | வெலிபத | 101டீ |
| | | மலிகஸ்பெ | 101ஈ |
| | | தடல்ல மேற்கு | 102 |
| | | தடல்ல கிழக்கு | 102ஏ |
| | | வலவ்வத்த | 102பி |
| | | சியம்பலாகஹவத்த | 102சீ |
| | | கிங்தோட்ட மேற்கு | 103 |
| | | கிங்தோட்ட கிழக்கு | 103ஏ |
| | | வெலிபிட்டிமோதர | 105 |
| | | குருந்துவத்த | 106 |
| | | பியதிகம | 107 |
| | | போபெ வடக்கு | 107ஏ |
| | | உக்வத்த கிழக்கு | 108 |
| | | மகஹபுகல | 108ஏ |
| | | உக்வத்த மேற்கு | 108பி |
| | | போபெ மேற்கு | 119 |
| | | போபெ கிழக்கு | 119ஏ |
| | | எத்திலிகொட தெற்கு | 130 |

**இரத்தினபுரி மாவட்டம்**

| பிரதேச செயலாளர் பிரிவு | திடீர் மரண விசாரணையாளர் பிரிவு | கிராம உத்தியோகத்தர் பிரிவும் இலக்கமும் | |
|---|---|---|---|
| எம்பிலிபிட்டிய | முல்எண்டியாவல | மடுவன்வெல | 207 |
| | | கங்கேயாய | 207 ஏ |
| | | ரஞ்சமடம | 207 பீ |
| | | நிந்தகம் பெலெஸ்ஸ | 207 சீ |
| | | உடவலவ இல 02 | 207 டீ |
| | | தியபொட்ட | 212 |
| | | சுதுகல | 212 ஏ |
| | | ஜந்துர | 212 பி |

| பிரதேச செயலாளர் பிரிவு | திடீர் மரண விசாரணையாளர் பிரிவு | கிராம உத்தியோகத்தர் பிரிவும் | இலக்கமும் |
|---|---|---|---|
| | | வலல்கொட | 213 |
| | | முல்எண்டியாவல | 213 ஏ |
| | | பனாமுர | 213 பி |
| | | தோரகொலயாய | 213 சீ |
| | | கோன்கட்டுவ | 213 டீ |
| | மொதரவான | உடகம | 214 |
| | | கும்புகொடஆர | 214 பி |
| | | மொரகெட்டிய | 214 சீ |
| | | ஹிகுரஆர | 214 டீ |
| | | கெட்டகல்ஆர | 214 ஈ |
| | | மொதரவான | 214 எப் |
| | | கலகெடிஆர | 214 ஐ |
| | எம்பிலிபிட்டிய நகரம் | எம்பிலிபிட்டிய பல்லேகம | 214 ஏ |
| | | எம்பிலிபிட்டிய புதியநகரம் | 214 ஜீ |
| | | யோதகம | 214 எச் |
| பலாங்கொட | கல்தொட்ட | கல்தொட்ட | 258 |
| | | மெதபெத்த | 258 பி |
| | | தஞ்சன்தென்ன | 258 சீ |
| | | நெலுயாய | 258 ஈ |
| | | கூரகல | 258எப் |
| | | உக்கல்கல்தொட்ட இடது கரை இடது | 259 |
| | | உக்கல்கல்தொட்ட இடது கரை தெற்கு | 259 ஏ |
| | | தியவின்ன | 260 ஏ |
| | | வெலிபதயாய | 260 பி |
| | | களுபேடிகம | 260 ஈ |
| | | கோன்கஹமங்கட | 260 எப் |
| | ராஸ்ஸகல | ராஸ்ஸகல | 265 |
| | | வெலேகும்புர | 265 ஏ |
| | | பொல்வதுகொட | 265 பி |
| | | விஜனத்கும்புர | 265 சீ |
| | | துரகந்த | 265 டீ |
| | | எகொட வலேபொட | 266 |
| | தாமஹன | தாமஹன | 252 |
| | | பட்டுகம்மன | 252 ஏ |
| | | விகிலிய | 252 சீ |
| | | தெலதிரிய | 252 ஈ |
| | | இம்புலாமுர | 253 |
| | | மகவலதென்ன | 253 ஏ |
| | | முல்கம | 258 ஏ |
| | | வட்டவல | 258 டீ |
| | | ரஜவக | 260 |
| | | மொலமுரே | 260 சீ |
| | | கொடகும்புர | 260 டீ |
| | | போவத்த | 261 |
| | | அல்தொர | 261 ஏ |

| பிரதேச செயலாளர் பிரிவு | திடீர் மரண விசாரணையாளர் பிரிவு | கிராம உத்தியோகத்தர் பிரிவும் இலக்கமும் | |
|---|---|---|---|
| கலவான | குக்குலேகம | குக்குலேகம் வடக்கு | 195 |
| | | வெவகம | 195 ஏ |
| | | குக்குலேகம தெற்கு | 195 பி |
| | | மீபாகம | 195 சீ |
| | | பிட்டிகலகந்த | 195 டீ |
| | | கொடிப்பிலிகந்த | 195 ஈ |
| | | ஜாதுவங்கொட | 195 எப் |
| கஹவத்த | மடலகம | பன்னில | 226 |
| | | கிழக்கு மியனவிட்ட | 226 பி |
| | | கிரனோதூகம | 226 சீ |
| | | கப்பெல | 226 ஈ |
| | | மேற்கு மியனவிட்ட | 226 எப் |
| | | மடலகம | 227 |
| | | யட்டாகர | 227 ஏ |
| | | எந்தான | 227 பி |
| | | மடலகம குடியேற்றம் | 227 சீ |
| | யாயின்ன | அட்டகலன்பன்ன | 225 |
| | | பஹமுனுபன்ன | 225 ஏ |
| | | வடக்கு பனாபிட்டிய | 226 ஏ |
| | | தெற்கு பனாபிட்டிய | 226 டீ |
| | | கலெல்எல்ல | 228 |
| | | நாம்புலுவ | 228 ஏ |
| | | யாயின்ன | 229 |
| | | உடஹவுபே | 229 ஏ |
| | | கிழக்கு நுகவெல | 230 |
| | | வெல்லதுர | 230 ஏ |
| | | மேற்கு நுகவெல | 230 பி |
| | | புங்கிரிய | 230 சீ |
| நிவிதிகல | கரவிட்ட | பகல கரவிட்ட | 173 |
| | | வதுபிட்டிய | 173 ஏ |
| | | உடகரவிட்ட | 173 பி |
| | | ஹொரங்கல | 173 சீ |
| | | பிங்கந்த | 174 டீ |
| | | தோலொஸ்வல கந்த | 176 பி |
| | | தெல்வல | 177 |
| | | பேபொட்டுவ | 177 ஏ |
| | | பனஹெட்டகல | 177 பி |
| | | ஹொரனேகார கந்த | 177 சீ |
| குருவிட்ட | குருவிட்ட | பத்பேரிய | 127 |
| | | பரகடுவ | 127 ஏ |
| | | பத்பேரிய மேற்கு | 127 பி |
| | | மெனேரிபிட்டிய | 127 சீ |
| | | தலாவிட்டிய | 146 |
| | | அமுஹேன்கந்த | 146 ஏ |
| | | போதிமலுவ | 146 பி |
| | | பொஹொரபாவ | 148 |
| | | மியனதெனிய | 148 ஏ |
| | | குருவிட்ட | 155 |

| பிரதேச செயலாளர் பிரிவு | திடீர் மரண விசாரணையாளர் பிரிவு | கிராம உத்தியோகத்தர் பிரிவும் | இலக்கமும் |
|---|---|---|---|
| | | கித்துல்பெ | 155 ஏ |
| | | பகல குருவிட்ட | 155 சீ |
| | | பாதகம | 155 டீ |
| | | தெப்பனாவ | 156 |
| | | இகலகம தெப்பனாவ | 156 ஏ |
| | | பகலகம தெப்பனாவ | 156 பி |
| | | ஓவிட்டிகம | 156 சீ |
| | எக்னெலிகொட | வலந்துர | 154 |
| | | காஹேன்கம | 154 ஏ |
| | | நடுகாரதெனிய | 154 பி |
| | | கலுகாகம | 154 சீ |
| | | காஹேன்கம மேற்கு | 154 டீ |
| | | கொஸ்கொட | 154 ஈ |
| | | தெல்கமுவ | 155 பி |
| | | கதன்கொட | 157 |
| | | கதன்கொட தெற்கு | 157 ஏ |
| | | புஸ்ஸெல்ல | 158 |
| | | மில்லவிட்டிய | 158 ஏ |
| | | வதுயாய | 159 |
| | | உடகட | 159 ஏ |
| | | எக்னெலிகொட வடக்கு | 159 பி |
| | | எக்னெலிகொட | 159 சீ |
| | | கிரகல | 159 டீ |
| அயகம | பரகல | உடுகல | 193 ஏ |
| | | உடுகல வடக்கு | 193 டீ |
| | | பராகல | 194 |
| | | பிம்புர | 194 ஏ |
| | | நிககொட | 194 பி |
| | தும்பர | கலதுர | 190 |
| | | சிங்கலகொட | 190 ஏ |
| | | மடபத்தர | 190 பி |
| | | பகல கலதுர | 190 சீ |
| | | தும்பர | 191 |
| | | கெட்டேபொல | 191 ஏ |
| | | தும்பர மானான | 191 பி |
| | | தெதபடகந்த | 191 டீ |
| பெல்மடுல்ல | மாரபன | மாரபன | 179 |
| | | மாவுதெல்ல | 179 ஏ |
| | | பொத்தகந்த | 179 பி |
| | | கல்லின்ன | 179 சீ |
| | | பகல ஹகமுவ | 180 |
| | | நிரல்கம | 180 ஏ |
| | | இகல ஹகமுவ | 180 பி |
| | | அலுபொத | 180 சீ |
| இம்புல்பே | இம்புல்பே | இம்புல்பே | 272 |
| | | பஸ்ஸரமுல்ல | 272 ஏ |
| | | அமுவதுகொட | 272 பி |
| | | மெதகெதரகொட | 272 சீ |

| பிரதேச செயலாளர் பிரிவு | திடீர் மரண விசாரணையாளர் பிரிவு | கிராம உத்தியோகத்தர் பிரிவும் | இலக்கமும் |
|---|---|---|---|
| | | அலுத்நுவர | 273 |
| | | தொட்டபல்ல | 273 ஏ |
| | | மாமல்கஹ | 273 பி |
| | | அமுபிட்டிய | 273 சீ |
| | | சீலோகம | 274 |
| | | கிஞ்சிகுனே | 275 |
| | | கும்பல்கம | 275 ஏ |
| | | முத்தெட்டுவேகம | 276 |
| | | புவக்கஹாவெல | 276 ஏ |
| | | கரகஸ்தலாவ | 276 பி |
| | | ஹல்பே | 277 |
| | | புதுன்வெல | 277 ஏ |
| | | நித்தமலுவ | 277 பி |
| | | இகலகல்கம | 278 |
| | | விஹாரவெல | 278 ஏ |
| | | பெலிஹுல்ஓயா | 279 |
| | | கும்புறுதெனிவெல | 279 ஏ |
| | | யக்தெஹிவல | 279 பி |
| இரத்தினபுரி | கிலீமலே | வடக்கு கிலீமலே | 162 |
| | | குடாவ | 162 ஏ |
| | | ஸ்ரீ பலாபத்தல | 162 பி |
| | | சிறிபாகம | 162 சீ |
| | | எம்புல்தெனிய | 162 டீ |
| | | கெட்டவல | 162 ஈ |
| | | ரத்கம | 162 எப் |
| | | குறுலுவான | 162 ஜீ |
| | | மாபலான | 162 எச் |
| | | தெற்கு கிறிமலே | 163 |
| | | மல்வல | 163 ஏ |
| | | மீஹிட்டிய | 163 பி |
| | | எகொட மல்வல | 163 சீ |
| | | பாகொட | 163 டீ |
| | | துரெக்கந்த | 163 ஈ |
| | இரத்தினபுரி நகரம் | தேவாலெகாவ | 151 |
| | | கெட்டலியன்பல்ல | 151 ஏ |
| | | கஹங்கம | 151 பி |
| | | கொடிகமுவ | 152 |
| | | இரத்தினபுரி நகரம் | 152 ஏ |
| | | வெரலுப | 152 பி |
| | | மகவல | 152 சீ |
| | | மிஹிதுகம | 152 டீ |
| | | இரத்தினபுரி நகரம் வடக்கு | 152 ஈ |
| | | இரத்தினபுரி நகரம் மேற்கு | 152 எப் |
| | | எல்லேகெதர | 153 |
| | | புதிய நகரம் | 153 ஏ |
| | | மலங்கம | 153 பி |
| | | அமுதூகொட | 153 சீ |
| | | கொஸ்பெலவின்ன | 153 டீ |
| | | பட்டுகெதர | 181 |
| | | திரிவானாகெட்டிய | 181 பி |

| பிரதேச செயலாளர் பிரிவு | திடீர் மரண விசாரணையாளர் பிரிவு | கிராம உத்தியோகத்தர் பிரிவும் | இலக்கமும் |
|---|---|---|---|
| | | அங்கம்மன | 181 சீ |
| | | முவகம | 182 |
| | | முத்துவ | 182 ஏ |
| | | சமகிபுர | 182 சீ |
| | | முத்துவ கிழக்கு | 182 டீ |
| | | எத்ஓயா | 182 ஈ |
| வெலிகெபொல | முத்தெட்டுபொல | முத்தெட்டுபொல | 219 |
| | | கல்பாய | 219 பி |
| | | மடவலலந்த | 219 சீ |
| | | பம்பரகல | 219 டீ |
| | | புஸ்ஸெதோட்ட | 219 எப் |
| | | பதுல்லெகம | 220 |
| | | எலமல்பெ | 220 ஏ |
| | | கலட்டுவகந்த | 220 பி |
| | | தென்னஹேன | 220 சீ |
| | | ரங்வல | 221 |
| | | அம்மடுவ | 221 பி |
| | | உடரங்வல | 221 சீ |

**திருகோணமலை மாவட்டம்**

| பிரதேச செயலாளர் பிரிவு | திடீர் மரண விசாரணையாளர் பிரிவு | கிராம உத்தியோகத்தர் பிரிவும் | இலக்கமும் |
|---|---|---|---|
| மூதூர் | மூதூர் 01 | தோப்பூர் | 216 |
| | | அல்லிநகர் கிழக்கு | 216 ஏ |
| | | இக்பால் நகர் | 216 பி |
| | | பாலதோப்பூர் | 216 சீ |
| | | அல்லி நகர் மேற்கு | 216 ஈ |
| | | பள்ளிகுடியிருப்பு | 219 |
| | | நல்லூார் | 219 ஏ |
| | | பாட்டாளிபுரம் | 219 பி |
| | | சம்பூர் கிழக்கு | 220 |
| | | சம்பூர் மேற்கு | 220 ஏ |
| | | கூனித்தீவு | 221 |
| | | நவரத்னபுரம் | 221 ஏ |
| | | கட்டைப்பறிச்சான் தெற்கு | 222 |
| | | செஹாய்யூர் | 222 ஏ |
| | | கட்டைப்பறிச்சான் வடக்கு | 222 பி |
| | | கடற்கரைச்சேனை | 222 சீ |
| | | மூதூர் கிழக்கு | 223 ஏ |
| | | தக்வா நகர் | 223 சீ |
| | | நீதல் நகர் | 223 டீ |
| | | நடுத்தீவு | 223 ஈ |
| | | மூதூர் மத்தி | 223 எப் |
| | | பால நகர் | 223 ஜீ |
| | | ஆலிம் நகர் | 224 பி |
| | | தாஹா நகர் | 224 சீ |
| | | ஜின்னா நகர் | 224 ஈ |

| *பிரதேச செயலாளர் பிரிவு* | *திடீர் மரண விசாரணையாளர் பிரிவு* | *கிராம உத்தியோகத்தர் பிரிவும் இலக்கமும்* | |
|---|---|---|---|
| *மூதூர்* | *மூதூர் 02* | *ஜின்னா நகர்* | *216 டீ* |
| | | *மல்லிகைதீவு* | *218* |
| | | *கிளிவெட்டி* | *218 ஏ* |
| | | *பட்டிதிடால்* | *218 பி* |
| | | *கங்குவெளி* | *218 சீ* |
| | | *பெருவெள்ளி* | *218 டீ* |
| | | *இருதயபுரம்* | *218 ஈ* |
| | | *பலதடிச்சேனை* | *218 எப்* |
| | | *பாரதீபுரம்* | *218 ஜீ* |
| | | *அஸ்ஸாத் நகர்* | *218 எச்* |
| | | *மேன்காமம்* | *218 ஐ* |
| | | *மூதூர் மேற்கு* | *224* |
| | | *பெரியபாலையம்* | *224 ஏ* |
| | | *ரால்கல்லி* | *224 டீ* |
| | | *ஷாபி நகர்* | *224 எப்* |
| | | *ஜயா நகர்* | *224 ஜீ* |

*7-900*

---

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## இலங்கை உள்நாட்டு இறைவரிச் சேவையின் தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2016

இலங்கை நிர்வாக சேவையின் தரம் III இன் பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான போட்டிப் பரீட்சைக்கான பின்வரும் தகைமைகளைக் கொண்டுள்ள இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. இவ் அறிவித்தலில் 'செயலாளர்' என்பது 'நிதி விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சின் செயலாளரைக் குறிக்கும்'. 'சேவை' என்ற சொல் வேறு விதமாகக் குறிப்பிடப்படாத சந்தர்ப்பங்களில் 'இலங்கை உள்நாட்டு இறைவரிச் சேவையைக் குறிக்கும்'.

2. இப்பரீட்சையின் மூலம் இலங்கை உள்நாட்டு இறைவரிச் சேவையின் தரம் III இற்கானஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படும்.

*எழுத்துப் பரீட்சை.-* இப்பரீட்சை பின்வரும் மூன்று (03) வினாப்பத்திரங்களைக் கொண்டிருக்கும் :

(i) கிரகித்தல்.
(ii) நுண்ணறிவு.
(iii) பொதுஅறிவு.

*பரீட்சைத் திகதி.-* இப்பரீட்சை நவெம்பர் மாதம் கொழும்பு நகரில் நடாத்தப்படும். அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அறிவுறுத்தல்களுக்கு உட்பட்ட வகையில் இப்பரீட்சையை ஒத்திவைக்கும் அல்லது இரத்துச் செய்யும் அதிகாரத்தை செயலாளர் கொண்டுள்ளார்.

*நேர்முகப் பரீட்சை.-* எழுத்துப் பரீட்சையின் அனைத்து வினாப்பத்திரங்களுக்கும் தோற்றி, ஒவ்வொரு வினாப்பத்திரத்திலும் ஆகக் குறைந்தது 40% அல்லது 40% இற்குக் குறையாத புள்ளிகளைப் பெறும் பரீட்சார்த்திகளில் ஆகக்கூடிய புள்ளிகளைப் பெறும் விண்ணப்பதாரர்கள் அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும் நேர்முகப் பரீட்சைச் சபையொன்றினால், பதவி வெற்றிடங்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தப்படுவர்.

3. நியமிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை 30ஆகும். நியமனம் நடைமுறைக்கு வரும் திகதி அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளைக்கு இணங்கத் தீர்மானிக்கப்படும்.

**4. சேவைநிபந்தனைகள் :**

4.1 அரசாங்க சேவையின் நியமனங்களைக் கட்டுப்படுத்தும் பொது நிபந்தனைகளுக்கும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2013.04.05 ஆந் திகதிய 1804/ 50 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட இலங்கை உள்நாட்டு இறைவரிச் சேவையின் சேவைப்பிரமாணக் குறிப்பில் விதிக்கப்பட்டுள்ள கட்டளைகள் மற்றும் நிபந்தனைகளுக்கும், அப்பிரமாணக் குறிப்பில் செய்யப்பட்டுள்ள அல்லது இதன் பின்னர் செய்யப்படவுள்ள திருத்தங்களுக்கும், தாபன விதிக்கோவையினதும் நிதிப்பிரமாணக் கோவையினதும் ஏற்பாடுகளுக்கும் 2009.02.20 ஆந் திகதிய 1589/ 30 ஆம் இலக்க அதிவிசேட

வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலொழுங்கு விதிகளுக்கும் உட்பட்ட வகையில் தெரிவுசெய்யப்படும் பரீட்சார்த்திகள் சேவையின் தரம் III இற்கு நியமிக்கப்படுவர்.

4.2 இப்பதவி நிரந்தரமானதாகும். உங்களுக்கு உரித்தான சம்பளத் திட்டம் தொடர்பில் அரசாங்கத்தினால் எதிர்காலத்தில் எடுக்கப்படும் கொள்கைத் தீர்மானங்களுக்கு நீங்கள் கட்டுப்படுவது அவசியமாகும்.

4.3 இந்த நியமனம் மூன்று வருட தகுதிகாண் காலப்பகுதிக்கு உட்பட்டதாகும். அரசாங்க அல்லது மாகாண அரசாங்க சேவையில் நியமனம் நிரந்தரமாக்கப்பட்ட உத்தியோகத்தரொருவர் இப்பதவிக்கு நியமிக்கப்படுவாராயின், அவரது நியமனம் ஒரு வருட பதில் கடமைக்கு உட்பட்டதாக அமையும். இலங்கை உள்நாட்டு இறைவரிச் சேவையின் தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டு 03 வருடங்களில் சேவைப்பிரமாணக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு முதலாம் வினைத்திறன் தடைதாண்டலில் சித்தியடைதல் வேண்டும்.

4.4 01/ 2014 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கைக்கும் அதன் நேரெதிர்விளைவான சுற்றறிக்கைகளுக்கும் இணங்க சேவையில் இணைந்து 05 வருட காலத்துக்குள் உரிய அரச கரும மொழித் தேர்ச்சியைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

5. **மாதாந்த சம்பள அளவுத் திட்டம்**.- 2016.02.25 ஆந் திகதிய 03/ 2016 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் அட்டவணை I இற்கு இணங்க, இப்பதவிக்குரிய சம்பள அளவுத் திட்டம் - ரூபா 47,615 – 10 x 1,335 - 8 x 1,630 - 17 x 2170 – 1,10,895 ரூபா (SL-01-2016) ஆகும். அச்சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு இணங்க, அதன் அட்டவணை II இற்கு இணங்கிய முறையில் உங்களுக்குச் சம்பளம் செலுத்தப்படும். (உதாரணம் : 2016.01.01 ஆந் திகதி முதல் 2016.12.31 ஆந் திகதி வரையில் அடிப்படைச் சம்பளமாக 27,871 ரூபாவும் 9,651 ரூபா சீராக்கல் கொடுப்பனவும் ஏற்புடையதாகும்).

6. **ஆட்சேர்ப்புக்கான தகைமைகள்** :

(அ) (i) இலங்கைப் பிரசையாக இருத்தல் ;

(ii) சிறந்த நன்னடத்தையுடையவராக இருத்தல் ;

(iii) நாட்டின் எந்தவொரு பிரதேசத்திலும் சேவை செய்வதற்குப் போதிய உடல் மற்றும் உள ஆரோக்கியத்தை எல்லாவகையிலும் பெற்றிருத்தல்.

(ஆ) கல்வித்தகைமைகள் :

(i) பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகமொன்றில் அல்லது பட்டம் வழங்கும் நிறுவனமாகப் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றினால் வழங்கப்படுகின்ற முதலாம் அல்லது இரண்டாம் வகுப்பு சித்தியுடனான பட்டமொன்றைப் பெற்றிருத்தல்.

அல்லது

(ii) உயர் நீதிமன்றச் சட்டதரணியொருவராக இருத்தல்

அல்லது

(iii) பட்டயக் கணக்காளரொருவராக இருத்தல்.

**குறிப்பு**.- I, II, III தகைமைகள் பயன் வலுப்பெறும் திகதி விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் திகதியாக அல்லது அதற்கு முன்னரான ஒரு திகதியாக இருத்தல் வேண்டும்.

(இ) வயது.- விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் திகதியில் இருபத்திரண்டு வயதுக்கு குறையாதவராகவும் இருபத்துஎட்டு (28) வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். (அதற்கிணங்க, விண்ணப்பதாரியின் பிறந்த திகதி 1994.08.25 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னராகவோ 1988.08.25 ஆந் திகதியன்று அல்லது அதற்கு பின்னராகவோ இருத்தல் வேண்டும்.)

அரசாங்க சேவையில் அல்லது மாகாண அரசாங்க சேவையிலுள்ளவர்களுக்கு ஏற்புடையதாகும் உயர்ந்தபட்ச வயதெல்லை 35 ஆகும்.

(ஈ) தகைமைகளுக்கான வரையறைகள் :

(i) போட்டிப் பரீட்சைக்கு இரண்டு (02) தடவைகளுக்கு மேல் தோற்றுவதற்கு எந்தவொரு விண்ணப்பதாரரும் அனுமதிக்கப்பட மாட்டார். (முன்னைய சேவைப்பிரமாணக் குறிப்பின் கீழ் விண்ணப்பதாரர்கள் இலங்கை உள்நாட்டு இறைவரிச் சேவையின் தரம் II/II இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான பரீட்சைக்குத் தோற்றிய தடவைகள் கவனத்திற்கொள்ளப்பட மாட்டா.)

(ii) இப்பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்குத் தேவையான தகைமைகள் அனைத்தும் விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் திகதியில் அல்லது அத்திகதிக்கு முன்னர் எல்லா விதத்திலும் பூர்த்தி செய்யப் பட்டிருத்தல் வேண்டும்.

(iii) ஏதேனும் ஒரு சமயத்தின் சமயத் தலைவர் பதவியை வகிக்கும் எந்தவொரு ஆளும் இப்பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்கு அல்லது தோற்றுவதற்கு அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

7. **பரீட்சைக் கட்டணங்கள்**.- பரீட்சைக்கான கட்டணம் ரூபா 1,000 ஆகும். அதனை விண்ணப்பங்களைப் பொறுப்பேற்கும் இறுதித் திகதிக்கு முன்னர் நாடெங்கிலும் அமைந்துள்ள ஏதேனும் தபால் அலுவலகத்தில் அல்லது மாவட்ட/ பிரதே செயலகத்தில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு 2003-02-13 இற்குவரவு வைப்பதற்காகச் செலுத்துவது அவசியமாகும். தபால் அலுவலகமொன்றில் அல்லது மாவட்ட/ பிரதேச செயலகமொன்றில் பெறப்படும் பற்றுச்சீட்டை விண்ணப்பப்படிவத்திலுள்ள உரிய கூட்டினுள் ஒட்டுவது அவசியமாகும். இக்கட்டணம் மீளளிப்புச் செய்யப்பட மாட்டாது. பற்றுச்சீட்டின் பிரதியொன்றை கைவசம் வைத்திருப்பது பயனுள்ளதாக அமைய முடியும். பரீட்சைக் கட்டணத்திற்காக காசுக் கட்டளைகள் அல்லது முத்திரைகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

8. **விண்ணப்பிக்கும்முறை** :

(அ) விண்ணப்பப்படிவம், இவ் அறிவித்தலுடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரிப்படிவத்தை ஒத்ததாக அமைதல் வேண்டும். அதனை 8 1/2" × 12" (A4) தாளில் இரு பக்கங்களையும் பயன்படுத்தி தயாரித்து விண்ணப்பதாரர் தனது கையெழுத்திலேயே நிரப்புதல் வேண்டும். இதற்கு கணனி மூலம் தயாரிக்கப்பட்ட தட்டச்சு செய்யப்பட்ட விண்ணப்பங்களையும் பயன்படுத்த முடியும். 1.0 இலிருந்து 2.12 வரையிலான தலைப்புக்கள் விண்ணப்பப்படிவத்தின் முதல் பக்கத்திலும் 3.0 முதல் 6.0 வரையான தலைப்புக்கள் அதன் இரண்டாம் பக்கத்திலும் மிகுதி மூன்றாம் பக்கத்திலும் அமையும் விதத்தில் விண்ணப்பப்படிவம் தயாரிக்கப்பட வேண்டும் என்பதைக் கவனத்திற்கொள்வது அவசியமாகும். மாதிரி விண்ணப்பப்படிவத்தை ஒத்ததாகத் தயாரிக்கப்படாத விண்ணப்பப்படிவங்களும், தகவல்கள் முழுமையாகக் குறிப்பிடப்படாத விண்ணப்பப்படிவங்களும் அறிவித்தல் எதுவுமின்றி நிராகரிக்கப்படும். (விண்ணப்பப் படிவத்தின் பிரதியொன்றை கைவசம் வைத்திருப்பது பயனுள்ளதாக அமைய முடியும். பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பப்படிவம் பரீட்சை அறிவித்தலில் காட்டப்பட்டுள்ள விண்ணப்பப்படிவத்தை ஒத்ததாக உள்ளதா என்பதை விண்ணப்பதாரர் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். அவ்வாறில்லாதவிடத்து விண்ணப்பம் நிராகரிக்கப்பட முடியும்.

(ஆ) விண்ணப்பப்படிவம், பரீட்சார்த்தி பரீட்சைக்கு தோற்றுவதற்கு எதிர்பார்க்கும் ஊடக மொழியில் அமைதல் வேண்டும்.

(இ) பரீட்சைக்காகப் பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப் பத்தைப் பதிவுத்தபாலில் 2016.08.25 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கும் விதத்தில் 'பரீட்சைஆணையாளர்நாயகம், ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைகள் கிளை, இலங்கை பரீட்சைத் திணைக்களம், தபால்பெட்டி இல.1503, கொழும்பு' என்ற முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தை அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "இலங்கை உள்நாட்டு இறைவரிச் சேவையின் தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை – 2016" என பரீட்சையின் பெயரை தெளிவாக எழுதுதல் வேண்டும். இத்தினத்திற்குப் பின்னர் கிடைக்கப்பெறும் எந்தவொரு விண்ணப்பமும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா. விண்ணப்பப்படிவத்தைத் தயாரிக்கின்ற போது அதன் தலைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சையின் பெயரை, சிங்கள விண்ணப்பங்களில் சிங்கள மொழிக்கு மேலதிகமாக ஆங்கிலத் திலும், தமிழ் விண்ணப்பங்களில் தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் எழுதுவதுஅவசியமாகும்.

(ஈ) விண்ணப்பப்படிவத்தில் பரீட்சார்த்தியின் கையொப்பம் அரசாங்கப் பாடசாலையொன்றின் அதிபரொருவரால், சமாதான நீதவானொருவர், சத்தியப்பிரமாண ஆணையாளரொருவரால், சட்டதரணியொருவரால் அல்லது பிரசித்த நொத்தாரிசு ஒருவரால், முப்படைகளிலுள்ள அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தரொரு வரால், பொலிஸ் சேவையிலுள்ள வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பதவியொன்றை வகிக்கும் உத்தியோகத்தரொருவரால் அல்லது 2,40,360 ரூபாவுக்கு (6-2016 ஆம் இலக்க பொது நிருவாக சுற்றறிக்கையின் 1 ஆம் உப பிரிவின்படி ரூபா 41,580 மாதாந்த சம்பளம் பெறும்) மேற்பட்ட அடிப்படை வருடாந்தச் சம்பளம் பெறும் அரசாங் கத்தில் நிரந்தரமான பதவியொன்றை வகிக்கும் உத்தியோகத்தரொருவரால் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

அரசாங்க சேவையில் மற்றும் மாகாண அரசாங்க சேவையிலுள்ள பரீட்சார்த்திகளின் கையொப்பங்கள் அவர்கள் பணிபுரியும் திணைக் களத் தலைவர்களினால் உறுதிப்படுத்தப்படுதல் வேண்டும்.

(உ) எல்லா விதத்திலும் முழுமையாகக் காணப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். தபாலில் அனுப்பும்போது விண்ணப்பப்படிவங்கள் தொலைந்தமை தொடர்பில் கிடைக்கும் முறைப் பாடுகள் கவனத்திற்கொள்ளப்பட மாட்டாது.

(ஊ) விண்ணப்பங்கள் கிடைத்தமை தொடர்பில் அறிவிக்கப்பட மாட்டாது. விண்ணப்பதாரர்களுக்கு அனுமதிப்பத்திரங்கள் அனுப்பப்பட்டதன் பின்னர் அது தொடர்பில் குறிப்பிட்டு பத்திரிகை அறிவித்தலொன்று இலங்கை பரீட்சைத் திணைக்களத்தினால் வெளியிடப்படும். அவ்அறிவித்தல் வெளியாகி 02 அல்லது 03 நாட்கள் கடந்ததன் பின்னரும் அனுமதிப்பத்திரம் கிடைக்காவிடின், அவ்அறிவித்தலில் குறிப்பிடப் பட்டுள்ளவாறு அது தொடர்பாகப் பரீட்சைத் திணைக்களத்துக்கு அறிவிப்பது அவசியமாகும். அவ்வாறு அறிவிக்கும்போது விண்ணப்பித்த பரீட்சையின்பெயர், விண்ணப்பதாரரின் முழுப் பெயர், முகவரி மற்றும் தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் என்பவற்றை உள்ளடக்குதல் வேண்டும். கொழும்புக்கு வெளியிலுள்ள விண்ணப்பதாரராயின், அவ்விபரங்களுடன் தொலைநகல் மூலம் அனுமதிப்பத்திரத்தின் பிரதியொன்றை அனுப்புவதற்காக விண்ணப்ப தாரரின் தொலைநகல் இலக்கத்தையும் குறிப்பிட்டு, கோரிக்கைக் கடிதமொன்றை திணைக்களத்திற்கு அனுப்பி விசாரிப்பது மிகவும் பயனுள்ளதாக அமையும். மேலும், பரீட்சைத் திணைக்களத்தினால் கோரப்படும் தேவையான தகவல்களை உறுதிப் படுத்துவதற்காக விண்ணப்பதாரர் தம்மிடம் வைத்துள்ள விண்ணப்பத்தின் பிரதி, பரீட்சைக் கட்டணத்திற்கான பற்றுச்சீட்டின் பிரதி மற்றும் பதிவுத்தபாலில் அனுப்பியமைக்கான பற்றுச்சீட்டு என்பவற்றைத் தயார்படுத்தி வைத்திருப்பது பயனுள்ளதாக அமையும்.

9. **பரீட்சைக்கானஅனுமதி :**

(அ) வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்டுள்ள விண்ணப்ப தாரிகள், அக்குறித்த வயதெல்லையினை கொண்டிருப்பதுடன் விண்ணப்ப முடிவுத் திகதியன்று அல்லது முன்பதாக பரீட்சைக்குரிய கட்டணத்தினை செலுத்தி அதன் பற்றுச் சீட்டினை இணைத்து பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலத்தினைக் குறிப்பிட்டு, குறித்த விண்ணப்பதாரி கையொப்பமிட்டு அதனை அத்தாட்சிப்படுத்தி (உரிய பெயரினை திணைக்களத் தலைவரினால் உறுதிப்படுத்துதல் வேண்டும்) விண்ணப்பப் படிவத்தினை முறையாக நிரப்பி அனுப்பி வைக்கும் விண்ணப்பதாரிகளுக்கு மட்டும் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சைக்கான அனுமதி அட்டை வழங்கப்படும். குறித்த அனுமதி அட்டையின்றி பரீட்சைக்கு தோற்றுவதற்கு அனுமதி வழங்கப்பட மாட்டாது.

(ஆ) பரீட்சார்த்திகள் தமக்கு குறித்துரைக்கப்பட்டுள்ள பரீட்சை மண்டபத்தில் பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும். ஒவ்வொரு பரீட்சார்த்தியும் உரிய பரீட்சை மண்டபத்திற்கு உரிய அனுமதி அட்டையில் கையொப்பத்தை உறுதிப்படுத்திக் கொண்டு முதலில் அம்மண்டபத்தில் தோற்றும் தினத்தில் அதனை மண்டப மேற்பார்வை யாளரிடம் ஒப்படைத்தல் வேண்டும். ஒவ் வொரு பரீட்சார்த்தியும் பின்பற்ற வேண்டிய சட்டதிட்டங்களின் தொகுதியொன்று இவ்வர்த்த மானியின் ஆரம்பத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. பரீட்சையை நடாத்துவது தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்ட திட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் கட்டுப்படுதல் வேண்டும். சட்ட திட்டங்களை மீறுமிடத்து அவர் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு ஆளாக நேரிடும்.

**குறிப்பு**.- பரீட்சார்த்தி ஒருவருக்கு பரீட்சை அனுமதிப்பத்திரம் வழங்கப்படுவது அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ளார் என ஏற்றுக்கொண்டதாக கருதப்பட மாட்டாது.

10. **பரீட்சார்த்திகளின் ஆள் அடையாளம்**.- தாம் தோற்றும் ஒவ்வொரு பாடத்தின் போதும் பரீட்சை மண்டப மேற்பார்வையாளர் திருப்தியடையும் விதத்தில் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்தில் தனது ஆள் அடையாளத்தை நிரூபிக்க வேண்டும். இதற்காகப் பின்வரும் ஆவணங்களில் ஏதேனும் ஒன்று மாத்திரமே ஏற்றுக்கொள்ளப்படும் :

(அ) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்படும் தேசிய ஆள் அடையாள அட்டை ;

(ஆ) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு.

11. **பொய்யான தகவல்களை வழங்குவதற்கான தண்டனை**.- பரீட்சார்த்தி ஒருவருக்கு தகைமைகள் இல்லை எனத் தெரியவருமிடத்து, இப்பரீட்சைக்கு முன்னர் அல்லது பரீட்சை நடைபெறும் காலத்தில் அல்லது பரீட்சையின் பின்னர் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவருடைய பரீட்சார்த்தி உரிமை இரத்துச் செய்யப்படலாம். பரீட்சார்த்தியொருவர் ஏதேனும் விடயங்களை அவை பொய்யானவை என்பதை அறிந்த நிலையில் சமர்ப்பித்துள்ளதாகத் தெரியவருமிடத்து, அல்லது ஏதேனும் முக்கியமான ஒரு விடயத்தை அவர் வேண்டுமென்றே மறைத்திருப்பாராயின் அவர் சேவையிலிருந்து நீக்கப்பட முடியும்.

12. இவ்ஒழுங்குவிதிகளில் கவனத்திற்கொள்ளப்படாத விடயங்கள் இருப்பின், அவை தொடர்பில் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அறிவுறுத்தல்களுக்கு உட்பட்டவகையில் செயலாளரினால் எடுக்கப்படும் தீர்மானங்களுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

13. **பரீட்சை முறை மற்றும் பரீட்சை மொழிமூலம் :**

(அ) இப்பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடாத்தப்படும்.

(ஆ) பரீட்சார்த்திகள் தாம் பட்டம் பெற்ற அல்லது தொழிற்தகைமையைப் பெற்ற மொழியில் அல்லது அரசகரும மொழியில் பரீட்சைக்குத் தோற்றுவது அவசியமாகும்.

(இ) பரீட்சார்த்தியொருவர் தகைமை பெற்ற பட்டத்தில் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மொழிகளில் சித்தியடைந்திருப்பின் அப்பட்டத்தில் அவர் சித்தியடைந்த பாடங்களில் அதிகமானவற்றில் சித்தியடைந்த மொழியில் அல்லது அரசகரும மொழியொன்றில் பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும்.

(ஈ) பிரதான பாடத்தை ஒரு மொழியிலும், மேலதிக பாடத்தை மற்றொரு மொழியிலும் சித்தியடைந்துள்ள விசேட பட்டமொன்றைப் பெற்றுள்ள பரீட்சார்த்திகள் பிரதான பாடங்களில் சித்தியடைந்த மொழியில் அல்லது அரசகரும மொழியொன்றில் பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும்.

**குறிப்பு** :

(i) மேலே (ஆ) மற்றும் (இ) இல் குறிப்பிடப்பட்ட தகைமை பெற்ற பட்டம் என்பது 6(ஆ) ஆம் பந்தியில் உள்ள பட்டங்களை அல்லது தொழிற் தகைமைகளைக் குறிக்கும்.

(ii) விண்ணப்பதாரர் பரீட்சைக்குத் தோற்றும் அனைத்து வினாப்பத்திரங்களுக்கும் ஒரே மொழியில் விடையளித்தல் வேண்டும்.

(iii) தனது விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிட்ட பரீட்சை எழுதுவதற்கான ஊடக மொழியை மாற்றுவதற்குப் பரீட்சார்த்திகளுக்கு இடமளிக்கப்பட மாட்டாது.

14. **ஆட்சேர்ப்புமுறை** :

14.1 *எழுத்துப் பரீட்சை.*- பின்வரும் பாடங்களைக் கொண்ட மூன்று (03) வினாத்தாள்களை உள்ளடக்கிய எழுத்துப் பரீட்சையொன்று நடாத்தப்படும். பாடங்கள் மற்றும் அவற்றில் சித்தியடைவதற்குப் பெறவேண்டிய ஆகக்குறைந்த புள்ளிகள் கீழே தரப்பட்டுள்ளன :

| *பாடம்* | *புள்ளிகளின் எண்ணிக்கை* | *சித்தியடைவதற்குப் பெறவேண்டிய ஆகக்குறைந்த புள்ளிகள்* |
|---|---|---|
| 1. கிரகித்தல் | 100 | 40 |
| 2. நுண்ணறிவு | 100 | 40 |
| 3. பொதுஅறிவு | 100 | 40 |

பரீட்சார்த்திகள் எல்லா வினாத்தாள்களுக்கும் தோற்றுவது கட்டாயமானதாகும்.

14.2 *சாதாரண நேர்முகப் பரீட்சை :*

(i) மேலே விடய இலக்கம் 06 இல் குறிப்பிட்ட ஆட்சேர்ப்புக்கான தகைமைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளனவா என்பதையும் அதன் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகள் தொடர்பான வரையறைகளுக்கு உட்பட்டவையாக உள்ளனவா என்பதையும் கண்டறிவதற்காகச் சாதாரண நேர்முகப் பரீட்சையொன்று நடாத்தப்படும்.

(ii) சாதாரண நேர்முகப் பரீட்சை சபை அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும்.

(iii) ஒவ்வொரு பாடத்திலும் ஆகக்குறைந்தது நாற்பது (40) அல்லது அதற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெறும் விண்ணப்பதாரர்களில் அனைத்துப் பாடங்களினதும் புள்ளிகளின் கூட்டுத்தொகை, சேவை மூப்பு என்பவற்றின் அடிப்படையில் ஆகக்கூடிய புள்ளிகளைப் பெறும் விண்ணப்பதாரர்கள் சாதாரண நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தகைமை பெறுவர். தகைமை பெற்ற விண்ணப்பதாரர்களிலிருந்து நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட வேண்டிய விண்ணப்பதாரர்களின் எண்ணிக்கை சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு எழுத்துப் பரீட்சையில் அவர்கள் பெற்ற திறமை ஒழுங்கு மற்றும் ஆட்சேர்ப்புச் செய்யப்படவுள்ள எண்ணிக்கை என்பவற்றின் அடிப்படையில் அரசாங்கசேவை ஆணைக் குழுவினால் தீர்மானிக்கப்படும். தகைமை பெறும் பரீட்சார்த்திகளின் எண்ணிக்கை மேலே குறிப்பிட்ட எண்ணிக்கைக்குச் சமனானதாக இல்லாத சந்தர்ப்பங்களில் அவ்வாறு தகைமை பெறும் பரீட்சார்த்திகள் மாத்திரமே நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

**கவனிக்க**.- நேர்முகப் பரீட்சைக்கு தோற்றுவது, நியமனம் வழங்கப்படுவதற்கான தகைமைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன என்பதாகக் கருதப்பட மாட்டாது.

14.3 வெற்றிடங்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்வதற்கு எதிர்பார்க்கப்படும் எண்ணிக்கையினரை ஆட்சேர்ப்புச் செய்யும் போது தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ள விண்ணப்பதாரர்கள் எழுத்துப் பரீட்சையில் பெற்ற புள்ளிகளின் அடிப்படையில் ஆகக்கூடிய புள்ளிகளைப் பெற்ற விண்ணப்பதாரரிலிருந்து திறமை ஒழுங்கில் இச்சேவையின் தரம் மூன்றிற்கு (III) ஆட்சேர்ப்புக்கள் மேற்கொள்ளப்படும்.

14.4 *பெறுபேறுகள்.-* வர்த்தமானி அறிவித்தலின் 14.1 பந்திக்கமைவாக தகைமை வாய்ந்த பரீட்சார்த்திகள் பரீட்சையில் பெற்ற மொத்தப் புள்ளிகளின் அடிப்படையிலான பெறுபேறு அட்டவணையானது அரச சேவை ஆணைக்குழுவின் செயலாளருக்கு வழங்கப்படும். பரீட்சையில் தோற்றிய அனைத்து பரீட்சார்த்திகளினதும் பெறுபேறுகள் தனிப்பட்ட முறையில் அறிவிக்கப்படும் அல்லது www. results.exams.gov.lk எனும் இணையத்தளத்தில் வெளியிடப்படும்.

15. **எழுத்துப் பரீட்சைக்கான பாடத்திட்டம் :**

பாட இலக்கம் 01 - கிரகித்தல்:

இவ்வினாப்பத்திரம் இரண்டு பகுதிகளைக் கொண்டிருக்கும்.

ஒவ்வொரு பகுதிக்கும் சம அளவிலான புள்ளிகள் வழங்கப்படும்.

I ஆம் பகுதி : இப்பகுதியில் கட்டுரையொன்றும் சுருக்கமொன்றும் உள்ளடங்கும்.

II ஆம்பகுதி :

பரீட்சார்த்தியின் மொழி அறிவைச் சோதிப்பதற்காகத் தயாரிக்கப்பட்ட உரைப்பகுதிகள் சிலவற்றை இரண்டாம் பகுதி கொண்டிருக்கும். இவ்உரைப் பகுதிகளில் கீழே கோடிடப்பட்ட சொற்களின் கருத்தை தனி வாக்கியமாகக் கூறுமாறு அல்லது அது தொடர்பில் விமர்சனக் குறிப்பு எழுதுமாறு அல்லது மாற்றுச் சொற்தொகுதியில் மிகவும் பொருத்தமான கூற்றைத் தெரிவுசெய்து காட்டுமாறு அல்லது தரப்பட்டுள்ள கேள்விக்கான விடைகள் பலவற்றில் சரியான பதிலைத் தெரிவுசெய்யுமாறு பரீட்சார்த்திகள் அறிவுறுத்தப்படுவர்.

(காலம் : 2 மணித்தியாலங்கள் — 100 புள்ளிகள்)

பாட இலக்கம் 02 - நுண்ணறிவு :

பரீட்சார்த்தியின் தர்க்க ரீதியாகச் சிந்திக்கும் ஆற்றலையும் சரியான முறையில் ஊகித்து தீர்மானங்களை மேற்கொள்ளும் ஆற்றலையும் அளவிடுவதை நோக்காகக் கொண்டு இது தயாரிக்கப்படும். இது ஒரு பல்தேர்வு வினாப் பத்திரமாகும். சுருக்கமாக விடையளிக்கும் வகையில் 50 கேள்விகள் வழங்கப்படுவதுடன் அவை அனைத்திற்கும் விடையளித்தல் வேண்டும்.

(காலம் 1 மணித்தியாலம் — 100 புள்ளிகள்)

பாட இலக்கம் 03 — பொது அறிவு :

இலங்கையின் புவியியல், அரசியல், பொருளாதார, சமூக மற்றும் கலாசாரச் சூழல் உள்ளிட்ட இலங்கையின் முழுச்சூழல் தொடர்பாகவும் சர்வதேச ரீதியில் முக்கியத்துவம் பெறுகின்ற சமகால நிலைமைகள் தொடர்பிலும் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சி தொடர்பிலும் பரீட்சார்த்தியின் அறிவைச் சோதிக்கும் விதத்தில் இவ்வினாப்பத்திரம் தயாரிக்கப்படும். அனைத்து வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.

(காலம் 3 மணித்தியாலங்கள் — 100 புள்ளிகள்)

16. இவ்அறிவித்தலின் சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கிலம் மொழி மூலங்களிலான அறிவித்தல்களுக்கிடையில் முரண்பாடுகள் காணப்படுமாயின், சிங்கள மொழியிலான அறிவித்தலின்படி செயற்படுதல் வேண்டும்.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளைப்படி,

ஆர். எச். எஸ். சமரதுங்க,
செயலாளர்,
நிதி அமைச்சு.

நிதி அமைச்சு,
கொழும்பு 01,
2016, யூலை 01.

மாதிரி விண்ணப்பப்படிவம்

(அலுவலக உபயோகத்திற்காக)

**இலங்கை உள்நாட்டு இறைவரிச் சேவையின் தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2016**

Open Competitive Examination for Recruitment to Grade III of the Sri Lanka Inland Revenue Service - 2016

1. மொழி மூலம் :

பரீட்சைக்குத் தோற்றும் மொழி :

சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4

(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதுக.)

2.0 தனிப்பட்ட தகவல்கள் :

2.1 முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) : ----.

(உதாரணம் : HERATH MUDIYANSELAGE SAMAN KUMARA GUNAWARDHANA)

2.2 முதலெழுத்துக்களை இறுதியில் குறிப்பிட்டு முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

(உதாரணம் : (GUNAWARDHANA, M.G.B.S.K.)

2.3 முழுப்பெயர் (சிங்களத்தில்/ தமிழில்) :----.

2.4 நிரந்தரமுகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) (பரீட்சை அனுமதிப்பத்திரம் இந்த முகவரிக்கு தபாலில் அனுப்பப்படும்) :----.

2.5 நிரந்தர முகவரி (சிங்களத்தில்/ தமிழில்) :----.

2.6 பால் வேறுபாடு :

ஆண் - 0
பெண் - 1

(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதுக)

2.7 விவாகமானவர்/ விவாகமாகாதவர் :

விவாகமாகாதவர் - 1
விவாகமானவர் - 2

(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதுக)

2.8 இனம் :

(சிங்களவர் - 1, தமிழர் - 2,
இந்தியத் தமிழர் - 3, முஸ்லிம் - 4,
ஏனையோர் - 5)
(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதுக)

2.9 தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :

2.10 பிறந்த திகதி :

ஆண்டு | மாதம் | திகதி

2.11 தகைமைகள் பூர்த்திசெய்யப்பட வேண்டிய 2016.08.25 ஆந் திகதியில் வயது :

வருடங்கள் | மாதங்கள் | நாட்கள்

2.12 தொலைபேசி இலக்கம் :

3. (i) பட்டம்/ தொழில் சார்ந்த தகைமையைப் பெற்ற திகதி :----.
(ii) பல்கலைக்கழகம்/ நிறுவனம் :----.
(iii) பதிவு இலக்கம் :----.
(iv) வெளிவாரியான/ உள்ளக :----.
(v) பட்டம்/ தொழிற் தகைமை :----.
(vi) பாடங்கள்/ துறை :----.
(vii) வகுப்பு :----.
(viii) மேல்/ கீழ் :----.
(ix) பரீட்சை இலக்கம் :----.
(x) பரீட்சைக்குத் தோற்றிய ஊடக மொழி :----.

4. அரசாங்க சேவையில் அல்லது மாகாண அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர்கள் :

(i) தற்போது வகிக்கும் பதவி அல்லது சேவை :----.
(ii) தரம் :----.
(iii) அப்பதவியில் இணைந்த திகதி :----.
(iv) பதவியில் நிரந்தரமாக்கப்பட்ட திகதி :----.
(v) சேவைக்காலம் :----.

5. பணம் செலுத்திய பற்றுச்சீட்டை உரிய விதத்தில் ஒட்டுக :-

6. **விண்ணப்பதாரரின் உறுதியுரை :**

இங்கு குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் எனது அறிவு மற்றும் நம்பிக்கைக்கு உட்பட்ட வகையில் உண்மையானவை என்றும் பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட .................. ஆந் திகதிய .................. ஆம் இலக்கப் பற்றுச்சீட்டு இதில் ஒட்டப்பட்டுள்ளது என்பதையும் வெளிப்படுத்துகிறேன். மேலும் பரீட்சைச் சட்ட திட்டங்களுக்கு இணங்கச் செயற்படுவதற்கும், இந்தப் பரீட்சையின் நிபந்தனைகளுக்கு இணங்க நான் தகுதியற்றவன் எனத் தெரியவருமிடத்து, பரீட்சைக்கு முன்னர் அல்லது நடைபெறுகின்றபோது அல்லது அதன் பின்னர் எனது பரீட்சார்த்தி உரிமையை இரத்துச் செய்வதற்கு எடுக்கப்படும் எந்தவொரு தீர்மானத்திற்கும் உடன்படுகின்றேன். மேலும் பரீட்சையை நடாத்துவது தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்ட திட்டங்களுக்குக் கட்டுப்பட்டு நடப்பேன் என்றும் உறுதிப்படுத்துகின்றேன்.

----,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :- ............................

7. விண்ணப்பதாரரின் கையொப்பத்தை உறுதிப்படுத்துதல் (வர்த்தமானி அறிவித்தல் 8(ஈ) இணங்கியதாக இருத்தல் வேண்டும்.)

இவ்விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் ........................ ......................................... (முழுப்பெயர்) என்பவரை நான் தனிப்பட்ட முறையில் அறிவேன் என்றும், உரிய பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தியுள்ளார் என்றும், அதற்கான பற்றுச்சீட்டு ஒட்டப்பட்டுள்ளது என்றும், ....... ........................ ஆந் திகதி அவர் எனது முன்னிலையில் கையொப்பமிட்டார் என்றும் உறுதிப்படுத்துகிறேன்.

----,
(கையொப்பத்தை உறுதிப்படுத்தும்
உத்தியோகத்தரின் கையொப்பம்)

கையொப்பத்தை உறுதிப்படுத்தும் உத்தியோகத்தரின் முழுப்பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
(உத்தியோகபூர்வ முத்திரை மூலம் உறுதிப்படுத்துவது அவசியமாகும்.)
திகதி :----.

8. நிறுவனத் தலைவரின் சான்றுப்படுத்தல் (அரசாங்க சேவையில் அல்லது மாகாண அரசாங்க சேவையிலுள்ள விண்ணப்பதாரர்களுக்கு மாத்திரம்) :

இந்த விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் .......................... ....................... (முழுப்பெயர்) என்பவர் இவ்அமைச்சில்/ திணைக்களத்தில் .................................................... ...... சேவையின் தரம் .................. இல் நிரந்தரப் பதவியொன்றில் சேவையாற்றுகின்றார் என்றும், அவர் எந்தவொரு ஒழுக்காற்றுத் தண்டனைக்கும் ஆளாக்கப்பட்டவராக இல்லை என்றும், இப்பதவிக்காகத் தெரிவுசெய்யப்பட்டால் இந்த நிறுவனத்தின் சேவையிலிருந்து விடுவிக்க முடியுமென்றும் உறுதிப்படுத்துவதுடன் அவருடைய விண்ணப்பத்தை சிபாரிசு செய்து சமர்ப்பிக்கின்றேன்.

----,
(திணைக்களத்தலைவரின் / கையொப்பம்)

கையொப்பத்தை உறுதிப்படுத்தும் உத்தியோகத்தரின் முழுப்பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
(உத்தியோகபூர்வ முத்திரை மூலம் உறுதிப்படுத்துவது அவசியமாகும்.)
திகதி :----.

7-934

## நீதிச்சேவை ஆணைக்குழுச் செயலகம்

### நீதிமன்ற முகாமைத்துவ உதவிச் சேவையின் நீதிமன்ற சுருக்கெழுத்தாளர் (சிங்களம் / தமிழ்) தரம் - III இற்குரிய பதவிக்கு ஆட்களைச் சேர்த்துக்கொள்வதற்கான திறந்தப் போட்டிப் பரீட்சை - 2016

அட்டவணைப்படுத்தப்பட்ட அரச உத்தியோகத்தர் சேவையின் நீதிமன்ற முகாமைத்துவ உதவிச் சேவைக்குரிய நீதிமன்ற சுருக்கெழுத்தாளர் (சிங்களம்/ தமிழ்) தரம் - III இற்குரிய பதவிக்கு பொருத்தமானவர்களைத் தெரிவுசெய்வதற்காக நீதிச்சேவைகள் ஆணைக்குழுவினால் இவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தேவையான தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப் படுகின்றன.

2. இப்பதவி நிரந்தரமானது. ஓய்வூதியத்திற்குரியதாகும்.

3. **சம்பள முறைமை**.- மாதத்திற்கு ரூ. 28,940 - 10 x 300 - 11 x 350 - 10 x 560 - 10 x 660 - 47,990 ரூபா எனும் சம்பள அளவு இப்பதவிக்கு உரியதாகும். இப்பதவியின் ஆரம்ப சம்பள படிநிலை ரூ. 28,940 ஆகும். (2020.01.01 ஆந் திகதி வரை அரச நிர்வாகச் சுற்றுநிருபம் 03/ 2016 அட்டவணை II இற்கு அமைவாக சம்பளம் செலுத்தப்படும்.)

4. **வயது**.- விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு விண்ணப்பதாரிகள் 18 வயதிற்கு குறையாத வர்களாகவும் மற்றும் 30 வயதிற்கு மேற்படாதவர்களாகவும் இருத்தல் வேண்டும். (அரச சேவையில் ஈடுபட்டுள்ள உத்தி யோகத்தர்களுக்கு உச்ச வயதெல்லை பொருந்தாது.)

5. **கல்வித் தகைமைகள்**.- க.பொ. த. (சா. த.) பரீட்சையில் இரண்டு தடவைக்கு மேற்படாத தடவைகளில் சிங்களம்/ தமிழ் மற்றும் கணிதம் உட்பட 6 பாடங்களில் சித்திபெற்றிருக்க வேண்டியதுடன் சிங்களம்/ தமிழ் உட்பட 5 பாடங்களுக்கு திறமைச் சித்தி பெற்றிருக்க வேண்டியதுடன் தேசிய இளைஞர் சேவைகள் மன்றம், தேசிய பயிலுனர் மற்றும் பயிற்சியளிக்கும் அதிகார சபை, தொழில்நுட்பக் கல்லூரி அல்லது அரசாங்கத்தில் பதிவு செய்யப்பட்ட பயிற்சி நிறுவனத்தில் சுருக்கெழுத்து மற்றும் தட்டெழுத்து (சிங்களம்/ தமிழ்) பாடநெறி ஒன்றை சிறப்பான முறையில் பயின்று விண்ணப்பப்படிவங்கள் ஏற்கப்படும் இறுதித் திகதிக்கு முன்னர் அப்பாடநெறியினைப் பூர்த்திசெய்திருக்க வேண்டும்.

6. விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சையொன்று நடாத்தப் படுவதுடன் அப்பரீட்சையின் பெறுபேறுகளுக்கு அமை வாக உரிய தேர்ச்சி மட்டத்தை அடைந்த விண்ணப்ப தாரிகள் வாய்மொழிப் பரீட்சையின் பின்னர் சேவையில் இணைத்துக்கொள்ளப்படுவார்கள். அவ்வாறு தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகள் சேவைக்கு இணைத்துக் கொள்ளப்பட்டதன் பின்னர் தீவின் எப்பிரதேசத்திலும் சேவையாற்றுவதற்கு தயாராக இருக்க வேண்டும்.

7. **மாதிரி வினாப்பத்திரம் :**

(அ) சிங்களம்/ தமிழ் மொழி மற்றும் கட்டுரையாக்கம்.

(ஆ) சிங்களம்/ தமிழ் சுருக்கெழுத்து - நிமிடத்திற்கு 70 சொற்கள் எனும் வேகத்தில் 05 நிமிடங்களுக்குள் வாசிக்கப்படும் பந்தியை சுருக்கெழுத்து செய்து, அதனை நிமிடத்திற்கு 08 சொற்கள் என்ற வேகத்தில் பிரதி செய்தல்.

(இ) சிங்களம்/ தமிழ் தட்டெழுத்து - குறைந்தது நிமிடத்திற்கு 30 சொற்கள் என்ற வேகத்தில் 20 நிமிடங்கள் தட்டெழுத்து செய்தல்.

(ஈ) வாய் மொழிப் பரீட்சை.

**குறிப்பு**.- விடைத்தாள்களுக்கு புள்ளிகள் வழங்கும் போது சுத்தம் மற்றும் செவ்வைத் தன்மை கருத்திற்கொள்ளப்படும்.

8. இப்பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் மாதிரி விண்ணப்பப்படிவமானது இவ்வறிவித்தலின் இறுதியில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. விண்ணப்பதாரிகள் தங்களது விண்ணப்பப்படிவங்களை மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைவாக மாத்திரமே தயாரித்தல் வேண்டும். பரீட்சைக்காக விண்ணப்பிக்கும்போது நிர்வாகக் கட்டணமாக மீளளிக்கப்படாத 500 ரூபாவினை நீதிச்சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளரின் பெயரில் மக்கள் வங்கியின் டாம் வீதிக் கிளையில் பேணப்பட்டுவரும் 297100199025039 என்ற கணக்கில் வைப்பிலிட்டு பெற்றுக்கொள்ளும் வைப்புச்சீட்டினை விண்ணப்பப்படிவத்தின் உரிய கூட்டினுள் ஒட்டவேண்டும்.

9. விண்ணப்பப்படிவங்கள் 2016, ஓகத்து 26 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ "செயலாளர், நீதிச்சேவைகள் ஆணைக்குழுச் செயலகம், கொழும்பு 12" எனும் முகவரிக்கு கிடைக்கும் வகையில் பதிவுத்தபாலில் அனுப்ப வேண்டும். விண்ணப்பப்படிவத்தைக் கொண்ட கடிதவுறையின் வலது பக்க மேல் மூலையில் நீதிமன்ற சுருக்கெழுத்தாளர் (சிங்களம்/ தமிழ்) எனக் குறிப்பிடல் வேண்டும். விண்ணப்பப் படிவங்களைப் பொறுப்பேற்கும் இறுதித் திகதிக்கு பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும். அரச சேவையில் பணியாற்றும் உத்தியோகத்தர்கள் தங்களது விண்ணப்பப்படிவங்களை திணைக்களத் தலைவரின் ஊடாக சமர்ப்பித்தல் வேண்டும்.

10. விண்ணப்பப்படிவங்கள் தொடர்பாக எழும் பிரச்சினைகள் அனைத்திற்கும் நீதிச்சேவைகள் ஆணைக்குழுவினால் எடுக்கப்படும் தீர்மானமே இறுதித் தீர்மானமாக அமையும்.

பிரதீப் ஜயதிலக,
செயலாளர்,
நீதிச் சேவை ஆணைக்குழு.

நீதிச் சேவை ஆணைக்குழுச் செயலகம்,
கொழும்பு 12,
2016, யூன் 30.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**நீதிச்சேவை ஆணைக்குழுச் செயலகம்**

நீதிமன்ற முகாமைத்துவ உதவிச் சேவையின் நீதிமன்ற சுருக்கெழுத்தாளர் (சிங்களம்/ தமிழ்) தரம் III இற்கு ஆட்களைச் சேர்த்துக்கொள்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2016

| | | |
|---|---|---|
| விண்ணப்பிக்கும் மொழி மூலம்<br><br>சிங்களம் - 01<br>தமிழ் - 02 | | சுட்டெண் : ................................<br>(அலுவலக உபயோகத்திற்கு மாத்திரம்) |

(**கவனிக்க**.- விண்ணப்பப்படிவத்தைச் செம்மையாகவும் மற்றும் தெளிவாகவும் விண்ணப்பதாரியின் கையெழுத்தில் நிரப்ப வேண்டும். உரிய கூடுகளில் உரிய இலக்கத்தை இடவும்.)

1. (i) முதலெழுத்துக்களுடன் பெயர் :----.
(ii) முதலெழுத்துக்களால் குறிக்கப்படும் பெயர்கள் : ----.

2. பால் நிலை :
பெண் - 01
ஆண் - 02 ☐

3. நிரந்தர முகவரி :----.

4. அனுமதி அட்டையை அனுப்ப வேண்டிய முகவரி :----.

5. வதியும் மாவட்டம் :----.

6. தொலைபேசி இலக்கம் :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

7. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

8. (அ) பிறந்த திகதி :----.

ஆண்டு :............. மாதம் :............. திகதி :.............

(ஆ) விண்ணப்பப்படிவங்கள் பொறுப்பேற்கும் இறுதித் திகதிக்கு வயது :

வருடங்கள் :............... மாதங்கள் :............... நாட்கள் :..................

9. அரச சேவையில் ஈடுபட்டிருப்பின் :

(i) அமைச்சு/ திணைக்களம் :----.
(ii) தற்போது வகிக்கும் பதவி :----.
(iii) அப்பதவிக்கு நியமனம் பெற்ற திகதி :----.
(iv) அப்பதவியில் நிரந்தரமாக்கப்பட்ட திகதி :----.
(v) அலுவலக முகவரி :----.

10. கல்வித் தகைமைகள் :

(ஒவ்வொரு பரீட்சையினதும் பெறுபேறுகளை அவற்றின் சுட்டெண்களுடன் வெவ்வேறாக குறிப்பிடுக.)

(அ) க.பொ.த. (சா. த.) பரீட்சை :

வருடம் :................. சுட்டெண் :.......................

| இல. | விடயம் | பெறுபேறு |
|---|---|---|
| | | |

வருடம் :................. சுட்டெண் :.......................

| இல. | விடயம் | பெறுபேறு |
|---|---|---|
| | | |

(ஆ) க.பொ.த. (உ. த.) பரீட்சை :

வருடம் :..................... சுட்டெண் :........................

| இல. | விடயம் | பெறுபேறு |
|---|---|---|
| | | |

(இ) பயின்றுள்ள பாடநெறிகள் தொடர்பான விபரம் : (வர்த்தமானப் பத்திரிகையின் 05 ஆவது பிரிவின் படி நிரப்பவும்) :
..................................................................................

**குறிப்பு**.- விண்ணப்பதாரியினால் சுற்றுநிருபத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களின்படி உரிய பெறுமதியை வைப்புச்செய்து பெற்றுக்கொண்ட வைப்புச்சீட்டினை இவ்விடத்தில் ஒட்டவும்.

மேற்குறிப்பிட்ட விடயங்கள் உண்மையானவை மற்றும் சரியானவை எனவும் இப்பரீட்சைக்காக விதிக்கப்பட்டுள்ள சட்டங்களைப் பின்பற்றுவதற்கு சம்மதிக்கின்றேன் எனவும் உறுதியளிக்கின்றேன். மேற்குறிப்பிட்ட தகவல்களில் ஏதேனும் ஒன்று உண்மைக்குப் புறம்பானது என நான் தேர்ந்தெடுப்பதற்கு முன் தெரியவருமாயின் அக்காரணத்திற்காக நான் இப்பதவிக்கு தகைமையற்றிருப்பதற்கும், இப்பதவிக்கு நியமனம் பெற்ற பின்னர் அத்தவறு தெரியவருமாயின் எவ்வித நட்டஈடும் வழங்கப்படாமல் சேவையிலிருந்து நீக்கப்படலாம் என்பதனையும் நன்கறிவேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

**திணைக்களத் தலைவரின் சான்றிதழ்**

மேலே பெயர் குறிப்பிடப்பட்ட விண்ணப்பதாரி இவ்வமைச்சில்/ திணைக்களத்தில் பணிபுரிவதுடன் அவரினால் வழங்கப் பட்டுள்ள தகவல்கள் உண்மையானவை எனவும், அவர் மேற்குறிப்பிட்ட பதவிக்கு தெரிவுசெய்யப்பட்டால் அவரை விடுவிக்க முடியும்/ முடியாது என்பதனை தெரிவித்துக் கொள்கின்றேன்.

----,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.

பெயர் :----.
உத்தியோகபூர்வ முத்திரை :----.

திகதி :----.

7-938

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.